பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 18 வியாழக்கிழமை (02.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :95

## கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்கள் விடயத்தில் ராணுவத்தினர் உண்மையாக இருக்கவேண்டும்



### கண்காணிப்புக் குழுத் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு,மார்ச்2

கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டுவரும் ஆயுதக் குழுக்களின் விவகாரத்தில் உண்மையாக இருக்கவேண்டும் என்று இராணுவத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கேட்டுள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகிச் செல்லவுள்ள ஹொக்லண்ட், ஜெனீவாப் பேச்சுவார்த்தை களின் முடிவில் இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளூர் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே இந்தக் கடுமையான அறிக்கையை வெளியிட்டி ருக்கின்றார்.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான ஆயுதக்குழுக்கள் செயற்படு(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சுக்கு பின்பும் குடாநாட்டில் படையினரின் அச்சுறுத்தல் குறையவில்லை



### கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி முறைப்பாடு

பளை,மார்ச்2

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் பின்னரும்கூட படையினரின் நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல்கள் தணியவில்லை என்று யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.


பளையில் இயங்கும் யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட துணைத் தலைவர் மற்றி, கண்காணிப்பாளர் ஜென் ஆகியோர் பங்கேற்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்த உடன்பாடு திருத்தப்பட்டதா?

# அரசுத் தரப்பின் நிலைப்பாடு குறித்து புலிகள் கடும் அதிருப்தி; ஆட்சேபம்!



## நோர்வே ஊடாக மறுப்புத் தெரிவிப்பு

லண்டன்,மார்ச் 02

யுத்த நிறுத்த உடன்பாடு ஜெனீவாப் பேச்சுகளின்போது திருத்தப்பட்டது என்ற சாரப்பட அரச பேச்சுக்குழு அணி எடுத்திருக்கும் நிலைப்பாடு தொடர்பாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்துக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடும் அதிருப்தியையும் பலமான ஆட்சேபனையையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

அரசின் நிலைப்பாட்டை மறுத்துரைத்து ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கும் செய்தி ஒன்று நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக நேற்று இலங்கை அரசுக்குத் தெரியப் படுத்தப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

ஜெனீவாப் பேச்சுகளின் போது யுத்தநிறுத்த உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்யப் பட்டன என அரசாங்கத் தூதுக் குழு உறுப்பினர்கள் தெரிவித்துவரும் கூற்றுகள் ஆழ்ந்த கவலையையும், அதிருப்தியையும் தருவனவாக இருக்கின்றன என்று பாலசிங்கம் கூறியிருக்கிறார்.

இவ்வாறு உண்மைக்குப் புறம்பாகவும், மாறாகவும் நடந்துகொண்டிருக்கும் அரசாங்கத் தூதுக் குழு உறுப்பினர் சிலரின் செயல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமை

(14 ஆம் பக்கம் பார்க்க)



இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை பிரதமர் மன்மோகன்சிங் வரவேற்கும் காட்சி.

## சர்வகட்சி மாநாடு நாளை கொழும்பில்

கொழும்பு, மார்ச் 02

சர்வகட்சி மாநாடு நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

**இன்று: உயிரியல்-II, பௌதிகவியல் வினாத்தாள்கள்.**

**நாளை: தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்.**

## நான்கு வருடகாலமாகத் தடைப்பட்டிருந்த பேச்சு நான் ஆட்சிக்கு வந்த 100 நாளில் ஆரம்பமாச்சு



### உள்ளூராட்சி வேட்பாளர் சந்திப்பில் மஹிந்த பெருமிதம்

கொழும்பு, மார்ச் 2

ஜனாதிபதியாகி நூறு நாள்களுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பித்து சாதனைபடைத்தவன் நான், நிரந்தர சமாதானத்தை உருவாக்கத் துடிக்கும் எனக்கு இந்த நாட்டு மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பைத் தரவேண்டும். நிலையான சமாதானத்தை உருவாக்கி இந்த நாட்டின் அபிவிருத்தியையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் நான் உயர்த்துவேன்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைச் சந்திக்கும் நிகழ்வு ஒன்று நேற்று சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

நான்கு வருடங்களாகத் தடைப்பட்டிருந்த பேச்சுகளை நாம் இன்று புதிய உந்துசக்தியுடன் ஆரம்பித்துள்ளோம். (14 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கைகள் இன்று ஏற்றுக்கொள்ள முடியாதவை என்கிறார் ஆனந்தசங்கரி

### நீதிமன்றில் குறுக்கு விசாரணையில் அவர் சாட்சியம்

கொழும்பு,மார்ச் 2

தமிழீழ அரசு அமைவது தொடர்பாகவும், முஸ்லிம் மக்களுக்கு சுயநிர்ணய அடிப் படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஒரு சுயாட்சி மாகாணம் அமைப்பது தொடர்பாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிப்படைக் கொள்கை விதிகளைக் கூறும் ஷரத்துகள் இன்று ஏற்றுக்கொள்ள முடியாதவை. அவை காலத்தினால் செல்லுபடியற்றுப் போனவை.

- இப்படி நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

'சுடர் ஒளி' பத்திரிகை விடுதலைப் புலிகளின் மூலதனத்தில் நடத்தப்படுவது எனத் தாம் குற்றம் சுமத்தியுள்ளார் எனவும் அந்தச் சாட்சியத்தில் அவர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து தாம் அகற்றப்படுவதற்கு எதிராக வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்திருந்த வழக்கின் விசாரணை நேற்று பிற்பகல் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி கே.எஸ்.சுமத்திரபால முன்னிலையில் நடைபெற்றபோது நீதிமன்றில் குறுக்கு விசாரணைகளுக்கு பதிலளித்த சமயமே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இவ்வழக்கில் கட்சியின் செயலாளர் நாய

(14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடும்பப் பெண்ணைக் கோரமான முறையில் குத்திக் கொன்றார் மற்றொரு பெண்!

## கொக்குவில் பகுதியில் நேற்றுக்காலை கொடூரச் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் நேற்றுக்காலை குடும்பப் பெண் ஒருவர் மற்றொரு குடும்பப் பெண்ணால் கோரமாகக் குத்திக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவரின் மகளான யுவதி ஒருவரும் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

இரண்டு பெண்களின் குடும்பத்தினரிடையே நீண்ட காலமாக நிலவிவந்த பகைமையின் உச்சமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

பொற்பதி வீதியில் வசிக்கும் தங்கவேலு அன்னலட்சுமி என்ற ஐம்பது வயதானபெண்ணே கொலையுண்டவராவார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் ஒருவரான தங்கவேலு தயாளினி (வயது 21) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

ஐயாத்துரை ஜெயமலர் என்ற 54 வயதான குடும்பப் பெண்ணே இவரைக் கிறிஸ் கத்தி ஒன்றினால் குத்திக் கொலை செய்தார் என்று கூறப்படுகிறது.

இரண்டு பெண்களினதும் குடும்பங்களும் பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து கொக்குவிலில் வசித்து வந்தன. இரு குடும்பங்களுமே காணித் தகராறு காரணமாகப் பகைமை கொண்டிருந்தன என்று கூறப்படுகிறது.

கொலையுண்ட பெண் நேற்றுக் காலை தனது வீட்டில் முற்றத்தைப் பெருக்கிக் கொண்டு நின்ற சமயம் அடுத்த பெண் கூரிய கத்தி ஒன்றுடன் அவரை நெருங்கி வந்து நெஞ்சுப் பகுதியில் ஓங்கிக் குத்தினார் என்று கூறப்படுகிறது. நெஞ்சில் ஆழமாகக் கத்தி பாய்ந்ததில் பெருமளவு குருதி வெளியேறி தோய்ந்த நிலையில் அந்தப் பெண்ணின் சடலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது. குறிப்பிட்ட பெண்ணைக் கத்தியால் குத்துவதைக் கண்டு ஓடிப்போய் அதனைத் தடுக்க முற்பட்ட அவரது புதல்வியையும் கொலையாளியான பெண் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார்.

சம்பவம் பற்றி அறிந்து அங்கு வந்து திரண்ட அயலவர்கள் கொலையான பெண்ணைப் பிடித்துக் கட்டிவைத்து தாக்கினர் என்று கூறப்படுகிறது. ஆத்திரமுற்ற சிலரால் அவரது வீடும் அங்கிருந்த உடைமைகள் பலவும் அடித்து நொறுக்கப்பட்டன. பிரஸ்தாப பெண் பின்னர் கோப்பாய் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டார்.

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவம் நடந்த வீட்டுக்குச் சென்று கொலையுண்ட பெண்ணின் சடலத்தைப் பார்வையிட்டார்.

மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-13-15-78-86)



கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் நேற்றக் காலை பெண்கள் இருவருக்கிடையிலான பகைமை கொலையில் முடிந்த சம்பவத்தில் கொலையுண்ட குடும்பப் பெண்ணின் சடலத்தையும், அவரைக் கத்தியால் குத்திக் கொன்றார் என்று கூறப்படும் மற்றைய பெண் அயலவரால் தாக்கப்பட்டபோது அழுதுகொண்டு நிற்பதையும் படங்களில் காணலாம்.

கொலையாளியான பெண்ணின் வீட்டிலிருந்த உடைமைகள் அடித்து நொறுக்கப்பட்டுக் கிடப்பதையும் படத்தில் காணலாம். (படம்: கவி, நேசன்)

## டெ... ஸ் கண்ணி அகற்றும் குழு விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

அண்மையில் பருத்தித்துறையில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட டெனிஸ் கண்ணி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் இருவரும் கடமையில் இருந்த சமயம் கடத்தப்பட்டார்கள் என்னும் தகவல் தவறானது என்று டெனிஸ்கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 11ஆம் திகதி இவர்கள் இருவரும் பருத்தித்துறையில் வைத்துக் கடத்தப்பட்டிருந்தனர். கடமைக்குச் செல்லும் வழியில் வைத்தே இருவரும் கடத்தப்பட்டிருக்கின்றனர் என்று கண்ணி அகற்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடத்திச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கொழும்பில் இருந்து வந்த இரகசியப் பொலீஸ் குழுவினரால் விசாரிக்கப்பட்டமை தொடர்பாக நேற்றைய உதயனின் 3ஆம் பக்கத்தில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது.

பணியாளர்கள் இருவரும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயத்திலேயே கடத்தப்பட்டனர் என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்த தகவல் தவறானது என்று டெனிஸ் கண்ணி அகற்றும் குழுவின் யாழ்.முகாமையாளர் இ.தயாநிதி சுட்டிக் காட்டி உள்ளார். (ஐ)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 2

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் அ.த.க.பாடசாலையின் அதிபர் பதவிக்காகவே இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்பட இருந்தது. (ஐ-202)

## எச்.ஐ.வி. தொற்றிய பெண் ஒருவர் ஆஸ்பத்திரியில் இனங்காணப்பட்டார்

தாவடி,மார்ச்.2

'எய்ட்ஸ்' நோய்க் கிருமியான எச்.ஐ.வியின் தொற்றுக்கு இலக்காகிய பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க இரத்தப் பரிசோதனையில் இவருக்கு எச்.ஐ.வி. தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தாயான இவர் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் என்பனவற்றுக்காகச் சிகிச்சை பெற யாழ்.ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார்.

பிரஸ்தாப பெண் இரண்டாம் தடவையாகவும் திருமணம் செய்திருந்தார். இரண்டாவது கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் புரிந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

ஒருவார காலப் பகுதிக்குள் யாழ்.ஆஸ்பத்திரியில் இனங்காணப்பட்ட இரண்டாவது எய்ட்ஸ் நோயாளி இவராவார். சில தினங்களுக்கு முன்னர் ஆண் எய்ட்ஸ்நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் எச்.ஐ.வி. மிக வேகமாக பரம்பலடைந்து வருவதையே இவை எடுத்துக்காட்டுகின்றன என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-149)

## மாரவிலவில் வான் - கார் விபத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி காயம்

நீர்கொழும்பு வீதியில் மாரவில என்னும் இடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிக்கி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.தியாகேந்திரன் காயமடைந்தார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ''ஹைஏஸ்'' வான் ஒன்றில் அவர் பயணம் செய்துகொண்டிருந்த சமயம், மாரவில என்னும் இடத்தில் பின்னால் வந்த கார் ஒன்று வானை மோதியது என்றும் -

அதனால், வான் தடம்புரண்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் மேல் நீதிமன்ற நீதிபதியும், யாழ்.நீதிமன்ற எழுதுநரான பி.கேதீஸ்வரனும் காயமடைந்தனர்.

கையில் காயமடைந்த நீதிபதியும் தோள் மூட்டில் காயமடைந்த நீதிமன்ற எழுதுநரும் கொழும்பு வைத்தியசாலையில் கிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு பின் வீடு திரும்பினர்.

இச்சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்தனர். (3)

## பல்கலை. அனுமதிப் பாதிப்பு குறித்து ஜனாதிபதியுடன் பேச நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 2

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர்களின் நிலைமை குறித்து ஜனாதிபதியுடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சு நடத்தவிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த கல்விமான்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் இது விடயமாக ஆராயப்பட்டது.

இச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ்.கஜேந்திரன் உட்படபலர் கலந்துகொண்டனர்.

அண்மையில் வெளியான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் வழங்கப்படும் அனுமதியில் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் -

மீளவும் வெளியாகவிருக்கும் வெட்டுப் புள்ளிகளால், ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கூட அனுமதியை இழக்கும் ஆபத்து நிலவுகின்றது என்றும் - மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோருடன் பேச்சு நடத்துவது என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. (3)

## ஜெனீவாப் பேச்சின் போக்குக் குறித்து ஹெல உறுமயவுக்குள் முரண்பாட்டு நிலை

ஜெனீவாவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுத் தொடர்பான விவகாரத்தினால் அரசாங்கத்தின் பிரதான பங்காளிகளான ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜெனீவா அமைதிப் பேச்சுகளில் அரசுத் தரப்பின் போக்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஆதரவுநிலைப்பாட்டைக் கொண்ட ஒரு குழுவும், எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு குழுவும் ஹெல உறுமயக் கட்சிக்குள் உருவாகியுள்ளதனாலேயே இந்தப் பிளவுநிலை ஏற்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதன்படி, ஜெனீவாப் பேச்சுகளில் அரசின் போக்குக்கு ஆதரவாக வண. அத்துரலிய ரதன தேரர், உதய கம்மன்வில, கொட்டக தெனிய ஆகியோரும் -

எதிரான குழுவில் சம்பிக்க ரணவக்க, வண. எல்லாவல மேதானந்த தேரர் ஆகியோரும் - அங்கம் வகிக்கின்றனர்.

இந்த முரண்பாடு காரணமாகவே ஜெனீவாப் பேச்சுப் பெறுபேறு தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் வண. எல்லாவல மேதானந்த தேரர், சம்பிக்க ரணவக்க ஆகியோர் மட்டும் கலந்துகொண்டனர் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவை வழங்குவது அவசியம் என்ற நிலைப்பாட்டை வண. ரத்ன தேரர், உதய கம்மன்பில, கொட்டகதெனிய ஆகியோர் கொண்டுள்ளனர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கட்சிக்குள் முரண்பாடு தோன்றியமையும் குறிப்பிடத்தக்கது. (க-3)

## ஒருநாள் சிசு மந்துவிலில் மீட்பு!

சாவகச்சேரி,மார்ச் 2

வேம்பிராய் மந்துவில் பகுதியில் சன நடமாட்டமோ, மக்கள் குடியிருப்புக்களோ இல்லாத பகுதியில் உள்ள பற்றையிலிருந்து ஒரு நாள் பெண் சிசு ஒன்று பொதுமக்களால் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸாருடன் பொதும்க்கள் தொடர்பு கொண்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பொலீஸார் சிசுவை மீட்டு சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சிசுவின் தாய் எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணொருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-31-117)

கொழும்பு மாநகரத் தேர்தல்:

## தேர்தல்கள் ஆணையாளர் உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, மார்ச் 02

கொழும்பு மாநகரசபைத் தேர்தலை இடைநிறுத்தும்படி மேல்முறையீட்டு நீதிமன்றம் விதித்திருக்கும் இடைக்கால உத்தரவை தள்ளுபடி செய்யுமாறு கோரி தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவும் கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மஹிந்த தேசப்பிரியவும் நேற்று உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்தனர்.

ஐ.தே.கட்சிச் செயலாளர் என்.வி.கே. கே.வேரகொட உட்பட 20 பேர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை அமைச்சு ரீதியிலான நடவடிக்கை என்றும், அந்த கட்டளைக்குக் காரணம் காட்டப்படவேண்டியது அவசியமற்றது என்றும், ஆகவே மேற்படி தடையுத்தரவு தவறானதென்றும் மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

எனவே, மேற்படி இடைக்கால உத்தரவை நிராகரித்து உத்தரவு வழங்குமாறு மனுதாரர்கள் தமது மனுவில் கோரியிருக்கின்றனர். இந்த மனு பெரும்பாலும் இன்று அல்லது நாளை உயர்நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## முதுகல்விமாணி கற்கை நெறிக்கு நூறு பேர் தெரிவு

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்ட பீடாதிபதி அலுவலகத்தினால் முதுகல்விமாணி (M.Ed.)கற்கைநெறிக்கு நூறுபேர் புதிய கல்வியாண்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கு 50 பேரும், யாழ்.பல்கலைக் கழகத்தில் 50 பேருமாக மொத்தம் 100 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த முதுகல்விமாணி அனுமதித் தேர்வு பரீட்சைக்கு 980 பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-185)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒளிவு மறைவின்றி பேச்சு என்றோர் ஒளித்து மறைப்பது எதற்காக?

'சூடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' - என்பார்கள். தாங்களும் அந்த வகையறாவைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நிரூபிக்க முயல்கின்றார்கள் இலங்கை அரசியல்வாதிகள்.

ஜெனிவாவில் போயிருந்து - சர்வதேச சமூகம் பார்த்திருக்க - மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக ஒரு மேற்குலக நாட்டின் பிரதிநிதிகள் நடுநிலை வகிக்க - உலக ஊடகங்களின் கவனம் அதில் குவிந்திருக்க - இரண்டு நாள்கள் புலிகளுடன் சமரசம்பேசி, முடிவில் கறுப்பு - வெள்ளையில் எழுதி ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டுவிட்டு -

நாடு திரும்பியதும் இங்கு வந்திருந்து புதுக்கதை - புருடா - விடுகின்றது தென்னிலங்கைச் சிங்கள அரசு.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஏற்று மதித்து அதைப் பேணவும் அதற்கமைவாக முழு அளவில் ஒத்துழைத்துச் செயற்படவும்தமது பற்றுறுதியை ஜெனிவாவில் எழுத்தில் வெளியிட்ட அரச தரப்பு, கொழும்புக்கு வந்ததும் கதையை மாற்றி, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்தப் புலிகள் இணங்கியுள்ளார்கள் என்ற சாரப்பட கதை விடுகின்றது.

இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வுகாணும் விடயத்தில் தென்னிலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளை அளிப்பதும் அவற்றைக் காற்றில் பறக்க விடுவதும் வழமையான ஒன்றுதான். அதுதான் இலங்கைத் தீவின் கடந்த ஐந்து தசாப்தகால சரித்திரப்போக்கு.

ஆனால், சர்வதேச சமூகத்தின் முன்னால் - உலகமே பார்த்திருக்கத் தான் எடுத்த நிலைப்பாட்டை நான்கு நாள்களுக்குள்ளேயே அதை மாற்றிக் கொண்டு குத்துக்கரணம் அடிக்கும் புதுமை இப்போதுதான் அரங்கேறுகின்றது. இலங்கை இனப்பிரச்சினையை கூர்மையாக நோக்கிவரும் சர்வதேச சமூகத்திற்கு இந்த 'அந்தர் பல்டி' ஆச்சரியத்தைத் தருவதாக இருக்கும்.

ஐ.தே.கட்சியின் முன்னைய அரசு புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுகள் ஒளிவு மறைவானவை என்று குற்றம் சுமத்தி வந்த மஹிந்த ராஜபக்ஷவும் அவருக்குப் பின்னால் திரண்டு நிற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளும் - தாங்கள் ஆட்சிக்கு வந்தால் - தமது வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தால் - புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் வெளிப்படையானவையாகவும் ஒளிவுமறைவின்றியும் (Transparency) நடைபெறும் எனக் கூறிவந்தனர்.

மஹிந்த ஜனாதிபதியாகிவிட்டார். பேச்சுகளும் ஆரம்பமாகி விட்டன. ஆனால், அரசுத் தரப்பின் போக்கில்தான் வெளிப்படை இல்லை. எல்லாம் சுத்துமாத்தாக - சூதுவாதாக - நடைபெறுகின்றன என மக்கள் ஐயப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

''ஜெனிவாப் பேச்சின்போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன என அரசு கூறி வருகின்றது. அவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தால் அவை என்ன என்பதை அரசு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். அப்போதுதான் அரசின் உண்மைத் தன்மையை மக்கள் உணர்வார்கள்.'' - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருக்கின்றது.

அமைதி முயற்சிகள் - சமாதானப் பேச்சுகள் - வெளிப்படையாக நடக்கும் என்று கூறிய மஹிந்த அணியினர், இப்போது ஐக்கிய தேசியக் கட்சி எழுப்பியுள்ள கேள்விகளுக்கு என்ன பதில் கூறப்போகின்றார்கள்?

ஜெனிவாப் பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகளிலிருந்து திசைமாறி, விலகி, வேறு தடத்தில் தென்னிலங்கை அரசுத்தரப்பு போகின்றது என நேற்று நோர்வேயிடம் விடுதலைப் புலிகள் முறைப்பாடு செய்திருக்கும் நிலையில் ஐ.தே.கட்சி முன்வைத்திருக்கும் கோரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

அரசு இவ்வாறு தடாலடியாகத் தனது கருத்தை - நிலைப்பாட்டை - மாற்றிக் கொண்டு புதிய தொனியில் அறிவிப்புக்களை விடுப்பது, ஜெனிவாப் பேச்சுகள் ஊடாகப் பரஸ்பரம் கட்டியெழுப்பப்பட்ட நம்பகத்தன்மையைத் தகர்ப்பதாகவும், சமாதான முயற்சிகளைப் பின்னடைவுக்குள் தள்ளுவதாகவும் அமைத்திருக்கின்றது என்று புலிகள் சுட்டிக் காட்டியிருப்பதும் அவதானிக்க வேண்டிய விடயமாகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் நாளை தென்னிலங்கையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தமது தலைமையில் சமாதானப் பேச்சுகள் வெளிப்படையானவையாக - ஒளிவுமறைவின்றி - நடை பெறும் எனத் தாம் அளித்த தேர்தல்கால வாக்குறுதியை அவர் நிறைவேற்ற வேண்டுமானால் -

ஜெனிவாப் பேச்சுகளில் எட்டப்பட்ட முடிவுகள் என்ன, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் எந்தத் திருத்தத்தைச் செய்வதற்குப் புலிகள் அங்கு இணங்கினார்கள் என்பன போன்றவை தொடர்பாக எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு அவர் நாளைய சர்வகட்சி மாநாட்டில் பதில் தரவேண்டும்; விளக்கமளிக்க வேண்டும்.

பதில் தருவாரா? விளக்கம் அளிப்பாரா? அல்லது மூடுமந்திரமாக விடயங்களை வைத்துக் கொண்டு, தனது முகவர்கள் மூலம் 'பொய்க்கதைகளை' தொடர்ந்து அவிழ்த்து விடப் போகின்றாரா?

பொறுத்திருந்து பார்ப்போமே!

# பேச்சில் வெற்றிபெற்றதாக அரசாங்கம் தம்பட்டம் அடித்து மக்களை ஏமாற்றுகிறது

## விக்கிரமபாகு கருணாரட்ன கூறுகின்றார்!

கொழும்பு,மார்ச் 2

''நிலத்தில் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதற்கு ஒப்பாக, தாம் ஜெனீவாப் பேச்சுகளில் வெற்றிபெற்றுள்ளதாகத் தம்பட்டம் அடித்து மக்களை ஏமாற்றி வருகிறது இன்றைய அரசு.''

- இவ்வாறு இடதுசாரிகள் முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இடதுசாரிகள் முன்னணி மற்றும் ஐக்கிய சோசலிசக் கட்சி என்பன இணைந்து கொழும்பில் போட்டியிடவுள்ளன. இரு கட்சிகளின் வேட்பாளர்களுக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த திங்களன்று கொழும்பிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக வாசுதேவ நாணயக்கார போட்டியிடவுள்ளார். இவர் தன்னை ஒரு இடதுசாரியாக அறிமுகப்படுத்திக் கொண்டு இனவாதிகளின் முகவராகவே செயற்பட்டு வருகிறார். இவர்கள் சிறுபான்மையினரை நசுக்கப்பார்க்கின்றார்கள்.

ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட வேட்புமனுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எனவே, ஐ.தே.கவின் ஆதரவாளர்களை எமது பக்கம் சாய்ப்பதற்கு நாம் முழுமூச்சுடன் அந்த மக்களை சந்திக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இடைக்காலத்தடை வழங்கப்பட்டுள்ளதால் தேர்தல் பிரசாரங்களை பிற்போட வேண்டிய அவசியம் எதுவும் எமக்கில்லை. மாறாக கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் திறமையாகப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளை முடுக்கி விடவேண்டும்.

எதிர்காலத்தில் இலங்கையில் இடதுசாரிகளின் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அதற்கு இந்தத் தேர்தலை நாம் சாதகமாகப் பயன்படுத்தி எம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (க-த)

# உழவு இயந்திரம், மருந்து விசிறும் கருவிகள் நெடுந்தீவு விவசாயிகளுக்குக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 2

நெடுந்தீவு விவாசாயிகளுக்கு ஜீ.ரி.இசற் நிறுவனம் உழவு இயந்திரம் ஒன்றினையும், மருந்து விசிறும் கருவிகளையும் வழங்கியுள்ளது.

இந்த உழவு இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பிரதான வீதியில் உள்ள ஜீ.ரி.இசற் நிறுவன அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் நெடுந்தீவு விவசாயிகள் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள், கமநலச் சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுந்தரேசன், நெடுந்தீவுப் பிரதேச செயலர் எம். பற்றிக் டிறஞ்சன், ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் வட புனரமைப்பு முதன்மை ஆலோசகர் பூல் பங்கரத்போ ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதன்மை ஆலோசகர் பூல் பங்கரத்போ உழவு இயந்திரத்தை நெடுந்தீவு விவசாயிகள் சங்கங்களின் சமாசப் பிரதிநிதியிடம் கையளித்தார். (த- 13)

ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் வட புனரமைப்பு முதன்மை ஆலோசகர் பூல் பங்கரத்போ உழவு இயந்திரத்தை நெடுந்தீவு விவசாயிகள் சங்கங்களின் சமாசப் பிரதிநிதியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்: மதுபாலா)



## உதயவாக்கு

கொடுக்கிறவன் தன்னைப் பெரியவனாகக் கருதுவானானால் அவன் சிறியவனாகிறான்

- பகவத்கீதை.

## நாளை

மாசி 19
வெள்ளிக்கிழமை
03.03.2006
திதி: சதுர்த்தி
முன்னிரவு: 10.46 வரை
நட்சத்திரம் : ரேவதி
முற்பகல் : 10.34
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் :10.57 - 12.27
(யாவும் பழைய நேரப்படி)

# அரச திணைக்களங்களில் மக்கள் தொடர்பு அலுவலர்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

பொதுமக்களின் திணைக்களங்களுடனான உறவை வலுப்படுத்தச் சகல திணைக்களங்களிலும் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மக்கள் நட்புறவான உயர் அரச சேவையைப் பெறுதல் என்னும் மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவுக் கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களை நியமிக்கவுள்ளது.

இதற்கான விவரங்களை மேற்படி அமைச்சு சகல மாகாண அமைச்சுகளிடமும் கோரியுள்ளது.

இவ்வாறு சகல திணைக்களங்களிலும் நியமிக்கப்படவுள்ள பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் திணைக்களங்களின் சேவை முன்னேற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், பொதுமக்கள் திணைக்கங்களிலிருந்து சேவையைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்தல், பொது மக்கள் செய்யும் முறையீடுகளுக்குத் துரிதமாகவும் பயனுறுதி வாய்ந்ததுமாக பதிலளிப்பது போன்ற பணிகளைச் செய்யவுள்ளார். (த-202-204)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

லவ்பேட்ஸ் கூடு, அல்சேசன் நாய்க்குரிய பெரிய இரும்புக்கூடு, பொம்மேரியன் நாய்க் குரிய கூடு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.யசோ, கோயில் வீதி, கொக்கு வில் கிழக்கு, நந்தாவில். **T.P.No. 0779009370.** (47423)

## காணி/ வீடு விற்பனைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகில் கந்தரோடை வீதியில் (சுப்பிரமணியம் வீதியில்) 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0779673557. (47447)

## வான் விற்பனைக்கு

சொந்தப் பாவனையில் உள்ள 58 XXXX தொடரிலக்கமுடைய டொல்பின் மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777286175, 4590476 (47360)

## விற்பனைக்கு / வாடகைக்கு

55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பா ணம் என்னும் முகவரியில் மேல்மாடி வீடு விற்பனைக்கு / வாடகைக்குண்டு. அத்து டன், அதே வீதியில் 5½ பரப்புக்காணி ஒன் றாகவும் .பிரித்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (47298)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் வாடகைக்குண்டு. (பகுதியாகவும் கொடுக் கப்படும்). தொடர்பு: 222 5739. (47425)

## மணமகள் தேவை

பிரித்தானிய குடியுரிமையுடைய, யாழ். இந்து கௌரவ குடும்பம், 1971 உத்தராடம் தனுசுராசி 15½ கிரகபாவம், A/L, தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 5'6'' உயரம் வெள்ளை நிற மணமகனுக்கு A/L மேல் பட்ட தாரி அழகான மணமகள் தேவை. மிகவிரை வில் மணமகன் யாழ்.வரவுள்ளார். தொடர்பு: சிவாலயா, இல.11, யமுனாவீதி, நல்லூர். **T.P.No. 0776528641.** (47437)

## SALE

**SELCO - SOLAR**
**wats - 40**
**KOMATSHU - Excavator**
**PC 75 u.u.**
**Contact - 0602213434**
**After - 7.00 p.m.**
(சி/48115) (32.26.17.15)

## தேவை

**Professional Camera,**
**Digital Camera**
**உடன் தேவை.**
**தொடர்பு: 0714115002.**
(சி/48119) (32.26.17.15)

## பதவி வெற்றிடம்

*கோண்டாவிலில் உள்ள வீடியோகஸ்த நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை உதவியா ளர் ஒருவர் தேவை.*
*திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.*
*தொடர்பு:*
**அஸ்வினி மல்ரி பிளாசா,**
**74, ராஜா பிளாசா,**
**பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.**
**தொ.பே.0776159651**
*(பி.ப.1 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்)*
(47363)(26.17.15)

## தேவை

*யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு உதவி நிர்வாக அலுவலர் தேவை. 40 வயதிற்கு மேற்பட்ட ஆங்கில அறிவுள்ள வர்கள் (அரச, தனியார் நிறுவனங்களில் வேலை செய்தவர்களும்) விண்ணப்பிக் கவும்.* (சி/48123)(26.17.15)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு தாதிய பரிபாலகர் நியமனம்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு பெண் தாதிய பரிபாலகர் புதிதாக நியமிக் கப்பட்டுள்ளார்.

திருகோணமலை, கொழும்பு, பொரளை வைத்திசாலைகளில் தாதிய சகோதரியாகப் பணியாற்றிய திருமதி ராஜினி தாபீக் என்பவரே தாதிய பரிபாலகராகப் பதிவியுயர்வு பெற்று முதல் தடவையாக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு நியமனம் பெற்றவராவார்.

இவருடன் தற்போது மூன்று தாதிய பரிபால கர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்றனர். (த-15)

## முதியோருக்குப் படுக்கை விரிப்பு

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 140 முதி யோர்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச சமூகசேவை உத்தியோகத் தரினால் படுக்கை விரிப்புகள் வழங்கப்பட் டன. ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் அலுவலகத்தில் முதியோர் சங்கத் தலைவர் கீத பொன்கலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இருநூறுக்கும் மேற்பட்ட முதியோர்கள் பங்குபற்றினர். (த-100)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம்:-** நாளை (03-03-2006) வெள்ளிக்கிழமை
**இடம்:-** சாவகச்சேரி றிபேர்க்கல்லூரி
**நேரம்:-** பி.ப.3 மணி

*அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.*

**செயலாளர்,**
**சாவகச்சேரி கைத்தொழில்வணிகர் மன்றம்.**
(சி/48120) (26.17.15)

## SriLanka Monitoring Mission SLMM
## SriLanka Monitoring Mission
## Immediate Vacancy - Jaffna
## Office Assistant / Translator

An immediate vacancy for office assistant / translator exists at the **SriLanka Monitoring Mission (SLMM) in Jaffna District office.**

**The position requires the following qualifications:**

- Minimum qualification of GCE 'A' Level and distinction pass in English at GCE 'O' level.
- Computer skills (Excel, Word).
- Excellent communication skills (both written and verbal) in English and Tamil. (Sinhalese will be an additional advantage)
- Preferably one year of experience in accounting.
- Translation from Tamil to English and vice versa.

**Salary:** Negotiable, but not less than Rs.19,000/= all - inclusive per month.

Please send in your application and CV to Mr.Jorn Asplund, Head of District in Jaffna, No.195, Temple Road, Jaffna or Email to slmm-t1@mfa.no before 9th March, 2006.

(47362)

## புளகாங்கிதம் அடைகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் சிற்பிகளில் ஒருவரும் இப்பீடத்தின் முதல் பீடாதிபதியும் சிறந்த விளையாட்டு வீரரும் சமூக சேவையாளருமாகிய

**பேராசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம்**

அவர்கள் முகாமைத்துவத் துறையில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றமையையிட்டுப் புளகாங்கிதமடைகின்றோம்.

மூன்றாம் அணி,
பட்டப்பின் டிப்ளோமா (பொதுநிர்வாகம்) மாணவர்கள்,
உயர் பட்டப் படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2006.

(47356) (32-26-15-17)

## பொதுக் கூட்டமும் சேவைநலன் பாராட்டும்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்க
16ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டமும்
முன்னாள் அதிபர் **திரு.கி.நடராசா**
அவர்களுக்கான
சேவை நலன் பாராட்டு நிகழ்வும்

**இடம்:-** உடுப்பிட்டி அ.மி.கல்லூரி கே.ரி.யோன் மண்டபம்.
**காலம்:** 04-03-2006 சனிக்கிழமை முற்பகல் 10 மணி.
**தலைவர் :** வைத்திய கலாநிதி மு.தங்கராசா.

*பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளின் பின் முன்னாள் அதிபர் திரு.கி.நடராசா அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வும் மதிய போசனமும் இடம்பெறும்.*

*சேவை நலன் பாராட்டு நிகழ்வில் கலந்துகொள் வோர் முற்கூட்டியே தங்களது பங்களிப்பினை உறுதி செய்து கொள்ளவும். தயவு செய்து உரிய நேரத்திற்கு சமுகம் தந்து ஒத்துழைப்பு நல்குமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.* (47427)(26.17.15)

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

பொ.குகதாஸ்,
செயலாளர்.

## SRI LANKA RED CROSS SOCIETY
## DANISH RED CROSS SOCIETY

**Danish Red Cross (DRC) in partnership with Sri Lanka Red Cross Society (SLRCS) is supporting School - based Psychosocial and Health programme for Children in Jaffna district.**

**Field Officer (1)**

**Must possess the following:**

- Degree/diploma in a field related to health or psychosocialwork or GCE A Level with 2 years. experience in relevant field
- Experience with community - based work
- Ability to work independently and in a team
- Excellent skills in English and Tamil - written and oral
- Strong computer skills
- Experience with the Red Cross preferred
- Possess a valid motorbike driver's license

**Responsibilities include:**

- Facilitation and support to project implementation at all levels
- Assist in participatory planning and project development
- Monitoring of and support to project components in the field
- Assistance to implementation of training programs .
- Assistance to implementaion of training programs
- Maintain data of beneficiaries

The position will be at the SLRCS Jaffna branch

Starting date: as soon as possible

**other Requirements for the above positions**
**High Degree in Computer literacy**
**Excellent command in English, Tamil and**
**Inter personal skills are essential**
**Age below 55 years**

Applications should be submitted no later than 10th of March 2006 to

**The BEO**
**Sri Lanka Red Cross Society**
**73, Kandy Road,**
**Jaffna.**
(சி/48124)

# மரண அறிவித்தல்கள்

## சிவகுருநாதன் இலட்சுமி



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவகுரு நாதன் இலட்சுமி அவர்கள் 28.02.2006 செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - நல்லமுத்து தம்பதியரின் அன்புமகளும் சின் னையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும் சிவகுருநாதனின் அன்பு மனைவி யும் தயாரஞ்சினி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்திய சாலை), சிவகுமாரன் (ஜேர்மனி), அமரர் சிவரூபன் (ரூபன் ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்), பத்மரஞ்சினி ஆகியோரின் அன் புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜவீதி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (47354)(42-26-17-15)

தகவல்:
**சி.சிவகுருநாதன்**
**(கணவர்).**

## ஐயப்பகுட்டி பத்மநாதப்பிள்ளை



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயப்பகுட்டி பத்மநாதப்பிள்ளை (ஓய்வு பெற்ற புகையிரதச் சாரதி) 20.02.2006 திங் கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சியாமிளா (ராணி-ஜேர் மனி), ரவீந்திரன் (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர் மனி), ரேணுகா (றஞ்சனா-ஜேர்மனி) ஆகி யோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (ஜேர்மனி- டோட் முண்ட் துர்க்கா ஸ்ரோஸ் உரிமையாளர்), ரவீந்திரராஜ் (ஜேர் மனி), மேனகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அசோக், ரிசோக், ஆர்த்திகா, கீர்த்திகா, விதுஷன், அகலியா, சா லிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.02.2006 செவ்வாய்க் கிழமை அன்று ஜேர்மனியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.


குறிப்பு:

நேற்றுமுன்தினம் உதயனில் 13 ஆம் பக்கத்தில் வெளியாகிய இந்த மரண அறிவித்தல் விளம்பரத்தில் காலஞ்சென்றவரின் மகளான சியாமிளா (ராணி) என்பவரின் பெயருடன் 'காலஞ் சென்ற' என்னும் பதம் சேர்த்துப்பிரசுரமாகிவிட்டது. தவறான தகவல் இடம்பெற்றமைக்காக வருந்துகிறோம்.

*ஸ்ரீ நாராயண வீதி,*
*அளவெட்டி மேற்கு.* (சி.48122) (39.26.17.15)

தகவல்:
**செ.சிதம்பரநாதன்,**
*(மச்சான்).*

# கோழி இறைச்சிக்கு குடம் இலவசம்



திண்டுக்கல்,மார்ச் 2

பறவைக் காய்ச்சல் பீதி பரவிவருவதால், கோழி இறைச்சி, முட்டை விற்பனை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நஷ்டத்தைச் சமாளிக்க முடியாமல் வியாபாரிகள் திண்டாடுகின்றனர். பலர் கடைகளை மூடிவிட்டனர்.

திண்டுக்கல்லில் சில வாரங்களுக்கு முன்பு வரை கோழி இறைச்சி கிலோ 70 ரூபா வரை விற்பனையானது. இப்போது 30 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இறைச்சி வியாபாரிகள், விற்பனையைத் தூக்கி நிறுத்த படாதபாடுபடுகின்றனர். திண்டுக்கல்லில் பல இடங்களில் ஒரு கிலோ இறைச்சிக்கும் 10 முட்டைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. சில கடைகளில் 18 லிற்றர் பிளாஸ்ரிக் குடம் இலவசமாக வழங்கப்படுகிறது. (ஐ)

# புஷ்ஷின் இந்திய வருகையை ஒட்டி ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பு உஷார்!

ஸ்ரீநகர்,மார்ச் 2

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் இந்திய விஜயத்தை ஒட்டி, ஜம்மு - காஷ்மீரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 2000ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியாவுக்கு வருகை புரிந்தார். கிளிண்டன் இந்தியாவில் காலடி எடுத்து வைப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, சட்டிசிங்போரா என்ற காஷ்மீர் கிராமத்தில் 35 சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்த நேரத்தைத் தொடர்புபடுத்தி, கொலைகாரர்கள் மற்றும் அவர்களுடைய நோக்கம் பற்றிப் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. இதை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை இன்னும் வெளியிடப்பட வில்லை.

இந்நிலையில், புஷ் வருகையின் போது இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கச் சீக்கியர், பண்டிட்டுகள் அதிகம் வசிக்கும் 67 கிராமங்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜம்மு, ஸ்ரீநகர் உள்ளிட்ட மாநிலத்தில் பிறபகுதிகளுக்கும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பறவைக் காய்ச்சல் தொற்றி வளர்ப்புப் பூனை மரணம்!

## ஜேர்மனியில் முதல் சம்பவம்

லண்டன்,மார்ச் 2

ஐரோப்பிய ஒன்றியத்தில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரணமான முதலாவது மிருகமாக ஒரு வளர்ப்புப் பூனை பதிவாகியுள்ளது.

ஜேர்மனியில் ஒரு வளர்ப்புப் பூனை 'எச் 5 என் 1' வைரஸ் பாதிக்கப்பட்டு இறந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பால்டிக் தீவான ரூஜென் என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அவ்விடத்தில் ஏற்கனவே டசின் கணக்கில் பறவைகள் பறவைக்காச்சலால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன. சுவிடனில் இரண்டு காட்டுத் தாரக்கள் பறவைக்காய்ச்சலில் பாதிக்கப்பட்டன. அவைகளில் 'எச் 5 என் 1' வைரஸ் பாதிப்பு இருக்கின்றதா என்பது ஆராயப்பட்டுவருகின்றது.

இதேவேளை -

பறவைக்காய்ச்சலைக் கட்டுப்படுத்துவது பற்றிய மாநாடொன்றில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் பாரிஸ் நகரில் நேற்று இரண்டாவது நாளாகக் கூடியிருந்தார்கள்.

பறவைக்காய்ச்சல் ஏற்பட்டுள்ள பகுதிகளில் பூனைகள் போன்ற மிருகங்களை வெளியில் விடாமல் சிறிதுகாலம் வைத்திருக்கும்படி அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட பறவைகளை உண்பதன் மூலம் பூனைகள் இந் நோய்க்குள்ளாகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் மிக அரிய இனமான இரண்டு பூனைகள் பறவைக்காய்ச்சலினால் வியட்நாமில் இறந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. பறவைக்காய்ச்சல் பரவிய சமயம் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் தாய்லாந்தில் தனியார் மிருகக் காட்சிச்சாலை ஒன்றின் பல டசின் புலிகள் இறந்துவிட்டன என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பூனைகளில் இருந்து மனிதருக்கு இன் நோய் பரவியதாக இதுவரை தகவல் இல்லை. ஆனால், இந்த வைரஸ் வெவ்வேறு இனங்களுக்கு பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள். (ஐ-ப)

# திருச்சி முழுவதும் டிஜிட்டல் பதாகைகள்

தி.மு.கவின் 9ஆவது மாநில மாநாடு நடைபெறவுள்ளதையொட்டி திருச்சி மாநகர் முழுவதும் டிஜிட்டல் பதாகைக ாகக் காட்சியளிக்கின்றன.

திருச்சியில் மார்ச் 3,4,5ஆம் திகதிகளில் நடைபெறும் மாநில மாநாட்டுக்காக கட்சியின் நிர்வாகிகள் முதலில் மத்திய பஸ் நிலையம், சத்திரம் பஸ் நிலையம் போன்ற முக்கிய இடங்களில் டிஜிட்டல் பதாகைகளை வைக்க ஆரம்பித்தனர்.

மாநாட்டுக்கான திகதி நெருங்க நெருங்க, நகரின் பெரும்பான்மையான பகுதிகளில் டிஜிட்டல் பதாகைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. (ஐ)



**இந்தியாவின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்றத்துக்கு வந்த நிதி அமைச்சர் ப.சிதம்பரம்.**

# காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு அல்-கெய்டா தலிபானுடன் ரகசியத் தொடர்பு - முஷாரப்

வாஷிங்ரன், மார்ச் 2

காஷ்மீரில் இருந்து செயற்படும் தீவிரவாதிகளுக்கு அல் - கெய்டா தலிபான் மற்றும் பாக். தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளது. இது மிகவும் ஆபத்தான கூட்டு என பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் பாகிஸ்தான் வருகையை முன்னிட்டு அமெரிக்க தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பயங்கரவாத இயக்கங்களின் தலைவர்கள் முக்கால்வாசிப்பேர் பாகிஸ்தான் உதவியுடன் பிடிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ஐ)

# சேது சமுத்திரத் திட்டத்துக்கு 100 கோடி ரூபா ஒதுக்கீடு !

புதுடில்லி,மார்ச் 2

சேது சமுத்திரத் திட்டத்துக்கு இந்த ஆண்டு இந்திய வரவு-செலவுத் திட்டத்தில் 100 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டம் சாரா செலவினங்களின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகத்துக்கு 52.31 கோடி ரூபாவும் சென்னை துறைமுகத்துக்கு 35 கோடி ரூபாவும் எண்ணூர் துறைமுகத்துக்கு 70 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் உற்பத்தித் தொழிற்சாலைக்கு இந்த வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அந்த ஆலையைச் சீரமைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பிலும் தொடர்ந்தும் கோரிக்கைகள் எழுப்பபட்டுவந்தன. (ஐ)

# தமிழால் இணைந்த நட்பு தேர்தலால் பிரிந்தது...!



**பா.ம.க.** நிறுவுநர் ராமதாஸ் - விடுதலைச் சிறுத்தைகள் பொதுச்செயலாளர் திருமாவளவன் இடையே தமிழால் இணைந்த நட்பு இன்று தேர்தலால் பிரிந்துவிட்டது.

பா.ம.கவுடன் நட்பு நீடிக்கும் என்று திருமாவளவன் கூறினாலும் தேர்தலில் இரு கட்சிகளும் எதிர் அணிகளில் இருக்கும் நிலையில் நட்பு நீடிக்கும் என்பது வெறும் வார்த்தைகளோடு நின்றுவிடும் என்று தெரிகிறது.

வட தமிழகத்தில் கீரியும் - பாம்புமாக இருந்த இவர்கள் கைகோர்த்து வலம் வந்தது பிற கட்சிகளின் கண்களையும் உறுத்தவே செய்தது. இவர்கள் இருவரின் நட்பு வலுவடைந்துவிட்டால் வட தமிழகத்தில் பெரும் சக்தியாகத் திகழ்வார்களே என்ற அச்சமும் பிற கட்சிகளுக்கு இருந்து வந்தது. தற்போது நட்பு முறிந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளதால் அப்படி எண்ணியர்வர்களுக்கு எல்லாம் பெரிய ஆறுதல்.

பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ் இவர்கள் இருவரையும் (ராமதாஸ் - திருமாவளவன்) இணைத்தது. ஆனால், தேர்தல் சதுரங்கத்தில் நட்புத் தோற்றுப்போய் விட்டது.

விடுதலைச் சிறுத்தைகளும் பாட்டாளி மக்கள் கட்சியினரும் 1992 இலிருந்து இணக்கமாகத்தான் இருந்து வந்தனர். ஆனால், அவ்வப்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் 1998 இற்குப் பிறகு பெரிய விரிசல் ஏற்பட்டு இருதரப்பிலும் விரோதத்தை வளர்த்துவிட்டது.

'முதல் எதிரி' என்று இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் பார்க்கும் அளவுக்குச் சூழ்நிலை மோசமானது. இதனால் வட மாவட்டங்களில் சமூக அமைதிக்குக் கூட பங்கம் ஏற்பட்டதுண்டு.

இந்த நிலையில் இரு தலைவர்களின் சிந்தனையில் - கருத்தில் கலந்திருக்கும் தமிழ் உணர்வை பலமாகக்கொண்டு இருவரையும் மீண்டும் கைகோர்க்க வைத்தனர் தமிழ் அறிஞர்கள்.

இந்த நட்பால் இரு கட்சிகளுக்கும் நன்மை கிடைத்ததோடு தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக ஒற்றுமைக்கு அடித்தளமாக அமைந்தது.

பல்வேறு தமிழ்ப் பாதுகாப்பு மாநாடுகளில் இருவரும் கூட்டாக கலந்துகொண்டனர். இதை தமிழ் அறிஞர்களும் கொண்டாடி மகிழ்ந்துவந்தனர்.

இந்நிலையில் சட்டப்பேரவைத் தேர்தல் வந்தது நடாளுமன்றத் தேர்தல் போலவே தி.மு.க. கூட்டணியில் ஐக்கியமானது பா.ம.க. விடுதலைச் சிறுத்தைகளையும் தி.மு.க. கூட்டணியில் சேர்த்துவிட வேண்டும் என்று பா.ம.க. துடியாய் துடித்தது. ஆனால், இடம் இல்லை என்று கையை விரித்துவிட்டது.

தி.மு.க. பா.ம.கவின் இந்த துடிப்புக்குக் காரணம் நட்பு மட்டுமே அல்ல. வட தமிழகத்தில் தலித்துக்களின் வாக்கு வங்கியை கருத்திற்கொண்டும் விடுதலைச் சிறுத்தைகள் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற வேண்டும் என்று விரும்பியது. ஆனால், பா.ம.க. முயற்சி தோல்வியில் முடிந்தது.

இடங்களின் எண்ணிக்கை ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், எங்களை தி.மு.க. அங்கீகரிக்க மறுப்பது எங்களுக்குப் பெரிய வேதனையாக இருந்தது. விடுதலைச் சிறுத்தைகளும் கூட்டணியில் உள்ளனர். தொகுதிகள் பின்னர் ஒதுக்கப்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி சொல்லியிருந்தால் 'நெட்டையோ குட்டையோ' நாங்கள் ஏற்றிருப்போம். ஆனால், தி.மு.க. எங்களை அவமானப்படுத்திவிட்டது. அதனால்தான் கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகள் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க விரும்பினர். இந்நிலையில் அ.தி.மு.கவிடமிருந்து அழைப்பு வந்ததால் ஏற்றுக் கொண்டோம் என்றார் திருமாவளவன். (ஐ)



- நன்றி: தினமணி

# ஸ்ரீலங்கா அரசின் போலித்தனங்களை சர்வதேசம் உணரத் தொடங்கிவிட்டது

**சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற 'விடுதலையின் வாசலில்' எழுச்சி நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையின் முதற் பகுதி நேற்றைய 'உதயனில்' வெளியானது. இறுதிப் பகுதி இது.**

ஆனால், பேச்சுவார்த்தை முடிந்த பின்னர், ''யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி...'' என்று எழுதவேண்டிய நிலை வந்துவிட்டது. சிங்களத் தரப்போ யுத்தநிறுத்தம் என்றுதான் போட வேண்டும், யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்று போடமுடியாது என்று பல மணித்தியாலம் போராடினார்கள். ஊடகவியலாளர்கள் பல மணிநேரம் காத்திருந்தார்கள்.

ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தம் என எழுத வேண்டும் என்று நோர்வேத் தரப்பு உறுதியாகச் சொல்லிவிட்டது. அதனால் வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

பேச்சுவார்த்தைக்குச் சிங்கள அரசு அனுப்பி வைத்த அணியினர் பேச்சுவார்த்தை மேசைக்குரிய பக்குவத்தோடு, தன்மையோடு வரவில்லை.

தமிழர்களது அபிலாசைகள், நிலைப்பாடுகளுக்கு எதிராக குரோத உணர்வு கொண்டவர்களைத்தான் மஹிந்த ராஜபக்ஷ அனுப்பி வைத்திருந்தார்.

இப்போது வெளியிடப்பட்ட கூட்டறிக்கையையும் நடைமுறைப்படுத்துவார்களா என்பதுதான் பிரச்சினை.

ஜெனீவா மண்ணில் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் சிங்களம் இப்போது சொல்லியிருப்பது பொய் என்பதை உலகம் புரிந்துகொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ளுகின்ற உத்தியாகவே இந்தப் பேச்சுவார்த்தையைப் பார்க்கின்றது. இதில் நாங்கள் விழிப்பாக இருக்கிறோம்.

**தமிழ் மக்கள் மீது அரச படைகள் அடாவடி**

ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் நிம்மதியாக இல்லை. அப்பகுதியிலிருந்து எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு பாதுகாப்புத் தேடி மக்கள் வந்திருக்கிறார்கள்.

புங்குடுதீவு தர்சினியை ஸ்ரீலங்கா கடற்படையினர் காமவெறி பிடித்து சித்திரவதை செய்து படுகொலை செய்து கிணற்றில் போட்டனர். பத்திரிகைகளில் வெளியான அந்தப் படங்களை எடுத்துக்கொண்டு தலைவரிடம் நாங்கள் சென்றபோது அவரது கண்கள் சிவந்து, கலங்கி இருந்தது. பாரிய ஆத்திரத்துடன் இருந்தார்.

அதன் பின்னர் சிங்களப் படைகளுக்கு மக்கள் என்ன செய்தார்கள்? மக்கள் ஒன்றும் சும்மா இருக்கவில்லை. தர்சினி முகம் கொடுத்த அந்தப் பயங்கர இரவை யோசித்துப் பாருங்கள்.

எங்களது மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்றழைக்கப்படுகின்ற இராணுவ சித்திரவதைக் கூடத்தில் சிக்கியுள்ளார்கள்.

மானிப்பாயில் தாயையும் இரு இளம் பெண்களையும் கதறக்கதறச் சுட்டுக் கொன்றுவிட்டுப் போகிறார்கள்.

திருகோணமலையில் பல்கலைக்கழகத்துக்குச் செல்லக் காத்திருந்த மாணவர்களைக் கடற்கரையில் சுட்டுத் தள்ளிவிட்டுப் போகிறார்கள்.

திருநெல்வேலியில் ஓர் அம்மாவுக்கு ஆஸ்துமா வருத்தம். வீட்டிற்கு வெளியே கிளம்பினால் இராணுவம் சுட்டுக்கொன்றுவிடும் என்ற அச்சத்தினால் அந்த அம்மா இரவு இரவாக ஆஸ்துமா நோயோடு போராடி அதிகாலை 4.30 மணியளவில் இறக்கிறார்.

## ஜெனீவாப் பேச்சின் முடிவுகளை அரசு அமுல்படுத்தும் என்ற நம்பிக்கையில்லை

3 வயது குழந்தைக்கு ஏதோ விசஜந்து கடித்துவிட்டது. அந்தப் பிள்ளையை மருத்துவமனைக்குக் கொண்டு போகமுடியாத நிலையால் அந்தப் பிள்ளை இறந்தது.

மன்னாரில் எரிந்த நிலையில் குழந்தையின் கையும் காலுமாகக் குடும்பத்தினரோடு காணநேரிட்டது. இப்படியான இராணுவ வன்முறைகளும் வெறியாட்டங்களும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

எரிக்சொல்ஹெய்ம், தலைவருடன் கதைத்த உடனே எங்கள் மக்கள் கைகளைக் கட்டிக் கொண்டு சும்மாதான் நிற்கிறார்கள். ஆனால், அவன் மட்டக்களப்பில் எங்கள் போராளியை அடுத்த நாளே சுட்டுக் கொன்றுவிட்டான்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாரிய புனர்வாழ்வுப் பணிகளைச் செய்து கொண்டிருக்கும் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிகளை நடத்துகின்ற ஓர் ஐயா உள்ளிட்ட 10 பேரைக் கடத்திக் கொண்டு போய்விட்டனர். 3 பேரை விட்டுவிட்டனர். மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது.

இவையனைத்தையும் ஸ்ரீலங்கா அரசாங்கக் குழுவின் முன்பாக வைத்தோம்.

இந்தப்பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்மையிலேயே இல்லை.

**அரசின் போலித்தனத்தை அனுபவிக்கிறது உலகம்**

இணைத் தலைமை நாடுகளின் குழுவும் கண்காணிப்புக் குழுவும் ஆயுதக் குழுக்கள் பற்றிய உண்மையை அம்பலப்படுத்தியிருக்கின்றன.

இத்தனை காலம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் போலித்தனங்களையும் ஏமாற்றுதல்களையும் நாங்கள் அனுபவித்தோம். இப்போது உலகம் அனுபவிக்கிறது.

ஜெனீவாவிலும் வந்து பேசிவிட்டுப் போகிறார்கள். என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்பம்.

நாங்கள் மனித உரிமைகளுக்காகத்தான், வாழ்வு உரிமைகளுக்காகத்தான் போராடுகின்றோம்.

நாங்கள் மிகவும் பண்பானவர்கள். உலகப்பந்தில் உள்ள ஆத்தனை உயிர்களுக்கும் உரித்தான வாழ்வுரிமைக்காகவே நாங்களும் போராடுகிறோம். அதைத்தான் நாம் வேண்டி நிற்கின்றோம். உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் இந்த ஏக்கத்துடன்தான் உள்ளனர்.

நாங்கள் பயங்கரவாத நோக்கத்துடன் செயற்படுகிறவர்கள் அல்ல.

எங்கள் இனமே இன்று புத்துணர்ச்சி பெற்றிருக்கிறது. எங்கள் தலைவரின் காலத்தில் பணிந்துபோகிறவர்கள் அல்ல. எந்த அச்சுறுத்தலுக்கும் வன்முறைகளுக்கும் அடிபணிந்து போகமாட்டோம். நிமிர்ந்து நிற்போம்.

உலகப் பந்திலே ஒவ்வொரு இனமும் எப்படி மகிழ்ச்சியாக, கௌரவமாக, நிம்மதியாக, நிமிர்வாக வாழ்கின்றார்களோ அதேபோல் நாங்களும் மிகவிரைவில் எங்களுடைய சுதந்திரத்தை உறுதிசெய்து கொள்வோம் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருக்கிறோம். எமது பயணத்தை அதை நோக்கித்தான் தலைவர் நகர்த்தியிருக்கிறார்.



**விடுதலையின் வாசலில்......!**

உண்மையில் விடுதலையின் வாசலில் வந்துவிட்டோம். வாசலில் வெகுநாள்கள் நிற்கமுடியாது. கதவைத்தட்டி உள்ளே சென்றாக வேண்டும். அப்படி உள்ளே சென்றால்தான் துள்ளி மகிழ்ந்து மகிழ்வான இருப்பை உறுதிசெய்து கொள்ள முடியும்.

ஜெனீவா நகரில் நின்று எங்களது உண்மைகளை உலகுக்கு அறைந்து சொல்லியிருக்கிறோம்.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் எழுச்சியோடு இருக்கிறார்கள். எங்கள் மக்களின் பலத்தில் நின்றுகொண்டு நாங்கள் எதையும் எதிர்கொள்வோம்.

இந்த ஜெனீவாவிலே பேசுவதற்கு உந்துசக்தியாக சுவிஸ் வாழ் தமிழ் மக்களின் உழைப்பு பெரும் பங்காற்றியிருக்கிறது என்று பெருமையுடன் கூறுகின்றோம்.

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் சிறைக்குள், பயங்கரவாதத்துக்குள் சிறைபட்டிருக்கும் அம்மக்கள் சிறையிலிருந்து மீள்வதற்கான வழிகளை ஏற்படுத்துகின்ற முயற்சிகளில் எங்களுடைய தலைவர் தீவிர அக்கறை செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பார்.

தலைவருக்குப் பலம் சேர்ப்பவர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' - என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (முற்றும்)

## சாயி நிறுவனங்கள் அமைத்த வீடு கையளிப்பு



புதிதாக நிறுவப்பட்ட வீட்டின் முன்பாக குடும்பத்தினர்.



முன்னர் வாழ்ந்த இல்லம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களால் அமைக்கப்பட்ட எட்டாவது வீட்டைக் கையளிக்கும் வைபவம் இன்று அராலியில் இடம்பெறவுள்ளது.

அராலி மேற்கில் வசிக்கும் - குடும்பத்தலைவரை இழந்த - திருமதி இராகினி என்பவரது குடும்பத்துக்கே இந்த வீடு கையளிக்கப்படுகிறது. அவர்கள் இப்போது வசிக்கும் குடிசையையும் புதிய வீட்டையும் படங்களில் காணலாம். (ஐ)

## கூட்டுறவுச் சபையால் மகளிர் பயிற்சித்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வித் திட்டத்தின் கீழ் மகளிருக்கான 4 பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

மனைப்பொருளியல் டிப்ளோமாப் பயிற்சி, மனைப் பொருளியல் அடிப்படைப் பயிற்சி, தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி, குறுகிய கால சுயமுயற்சிப் பயிற்சி ஆகிய பயிற்சிகளே நடத்தப்படவுள்ளன.

பயிற்சிபெற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னார் 'செயலாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி, இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-202)

## தவக்காலச் சிந்தனை 2

### உண்மையின் வழி சிலுவையின் பாதை

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். (லூக். 9:23)

துன்பங்கள், துயரங்கள், தோல்விகள், நோய்கள் இல்லாதவர் எவரும் இல்லை. இவற்றைக் கண்டு நாம் துவண்டு விடுவது மட்டுமல்லாது, மற்றவர்களுடன் ஒப்புநோக்கும் நிலைக்கு உட்படுகின்றோம். இது எம்மை மட்டும் சிந்திக்கும் சுயநலப்போக்காகும். துன்பங்கள் நாமாகத் தேடிக்கொண்டவை. பிறரால் பிறருக்காக அனுபவிப்பவையாகவும் இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சுமைகள் உண்டு. இவையனைத்தும் சிலுவைகள் என்று விரக்தி அடைவது மடமை. 'சிலுவைகளைச் சிலுவையால்தான் வெற்றிகொள்ளமுடியும்'

ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? (லூக்.9:25) வாழ்வுக்கு உதவாத நிலையற்ற இந்தக் கொடிய சிலுவைகளை இறக்கிவைத்துவிட்டு வாழ்வு தரும் இனிமையான இயேசுவின் சிலுவையின் வழி நடப்போம். இந்தப் பாதை கரடுமுரடானதாக இருந்தாலும் இறுதி இடம் மகிமையுள்ளதாக இருக்கும்.

இவற்றுள் தகுந்ததைத் தேர்ந்தெடுப்பது எமது பொறுப்பு. எனவே, எம்மைச் சூழ்ந்துள்ள உலக காரியங்களைப் பெரிதுபடுத்தாது இறைவனில் பற்றுறுதி கொள்வோம். அவரது கட்டளைகளையும் நியமங்களையும் முறைமைகளையும் கடைப்பிடித்து சுயநலம் தவிர்த்து தியாக உள்ளத்துடன் அவரது வழியில் நீடிய வாழ்வு வாழ்வோம். அப்போது சிலுவைகள் சிறு துரும்பாக மாறும்.

- எஸ்.யேசுதாஸ் - *கொழும்புத்துறை.*

## கல்வி அலுவலக வினைத்திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்2

யாழ்.கல்வி வலய மற்றும் வலயத்திற்குட்பட்ட கோட்டங்களின் அலுவலகங்களில் அலுவலக நிர்வாக வினைத்திறனை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

'ஜெய்க்கா' திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தச் செயற்பாடு நடைபெற்றுவருகின்றது.

நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தில் பாடசாலைகளின் வினைத்திறன் கூட்டுதல், கணித, விஞ்ஞான, ஆங்கிலக் கல்வியின் மேம்பாட்டைக் கூட்டுதல் போன்ற தர வட்டங்களின் வேலைகளும் நடைபெற்று வருகின்றன என்றும் -

இந்த வேலைத்திட்டம் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் முடிக்கப்படவேண்டும் என்றும் - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

'ஜெய்க்கா' திட்டத்தில் முதற்கட்டமாக கல்வி வலயத்திலுள்ள காலத்தால் பழைமை வாய்ந்தனவும் தேவையற்றவையெனவும் கருதும் உபயோகமற்ற உபகரணங்கள், கோவைகள் போன்றவை அப்புறப்படுத்தி அழிக்கும் பணி நடைபெற்று முடிந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-202-204)

## வளலாயிலிருந்து 5 பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

அச்சுவேலி சிற்றூர்திச் சேவைச் சங்கம் வளலாயிலிருந்து தினசரி 5 பஸ் சேவைகளை ஆரம்பித்துள்ளது. நேற்று புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் சேவைகள் தினமும் காலை 7 மணி, காலை 9.30 மணி, முற்பகல் 10.30 மணி, பிற்பகல் 3 மணி, மாலை 5 மணி ஆகிய நேரங்களில் நடத்தப்படும் எனச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (த-202)

# பனம்பொருள் உற்பத்தியை முன்னெடுக்க மூலவளங்கள் உண்டு; நிதியுதவி இல்லை!

## பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் கவலை

பரந்தன்,மார்ச்2

வன்னிப் பெருநிலப்பரப்பில் பனை வளம் அதிகமாக உள்ளபோதும் நிதி நெருக்கடி காரணமாகப் பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுதெடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை சார்ந்த உணவு உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலானோர் உள்ளனர். அத்துடன், அதற்கான மூலப்பொருள்களும் தேவையான அளவு இருக்கின்றன.

ஆனால், உற்பத்தி செய்வதற்கான நிதி உதவியைப் பனை அபிவிருத்திச் சபையோ, அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ வழங்குவதற்கு முன்வரவில்லை.

இதன் காரணமாகப் பனை உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியாத இக்கட்டான நிலையினை முல்லைத்தீவு பனை அபிவிருத்திச் சபை எதிர்நோக்கியுள்ளது.

இதனால் பனை சார் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கெனப் பயிற்சி பெற்றவர்களும் வேலைவாய்ப்பின்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, எவராவது முன்வந்து நிதியுதவி செய்யுமிடத்து எம்மிடம் உள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி பனம் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும்.

அத்துடன், பெரும்பாலானவர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-352-203)

## தையல் பயிற்சி நிலையம் அடம்பனில் திறப்பு

பூநகரி,மார்ச்2

மன்னார் மாவட்டத்தின் அடம்பன் - நெடுவரம்பைக் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

மேற்படி பயிற்சி நிலையமானது மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தினராலும் இளைஞர் மேம்பாட்டுப் பேரவையினராலும் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையத்தை இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் காஞ்சனன் நாடாவெட்டித் திறந்துவைத்தார். இப்பயிற்சி நிலையம் அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உகந்தது என அக்கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (த-403)

## சேமமடு பாடசாலையில் மலசலகூடம் இல்லை

புளியங்குளம்,மார்ச்2

வவுனியாப் பிரதேச சேமமடு சண்முகானந்த வித்தியாலயத்தில் மலசலகூட வசதிகள் இன்றி மாணவர்கள், ஆசிரியர்கள் அவதிப்படுகின்றனர்.

இங்கு 200 வரையான மாணவர்களும் 16 ஆசிரியர்களும் உள்ளனர். பாடசாலை விடுதிகளில் தங்கிநின்றும் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இங்கு மலசலகூடவசதிகள் இல்லை என்று சம்பந்தப்பட்ட பல தரப்பினருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாடசாலை ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (த-355)

## ஒட்டுசுட்டானில் கிராமிய வங்கிக்கிளை

ஒடடுசுட்டா ர,மார்ச்2

முல்லைத்தீவு கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளையை ஒட்டுசுட்டானில் அமைப்பதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று வருகின்றன. இக்கட்டட வேலைகள் ஓரிரு மாதங்களில் பூர்த்தியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-341)

## அறிவோர் ஆய்வரங்கு

பூநகரி,மார்ச்2

தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் நடத்தப்பட்டுவரும் மாதாந்தத் தேடல் அறிவோர் ஆய்வரங்கு மல்லாவி நுண்கலைக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

நுண்கலைக் கல்லூரி அதிபர் சிவசத்தியமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் "தமிழர் வாழ்வியலில் பாரம்பரிய கலைகள்" என்ற தலைப்பில் தமிழீழத்தின் மூத்த கலைஞர்களில் ஒருவரான தமிழ்க்கவி ஆய்வரங்கை நிகழ்த்தினார்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் கலைஞர்கள், பெரியோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (த-403)

## வவுனியா வடக்கில் பற்சிகிச்சை

புளியங்குளம்,மார்ச்2

வவுனியா வடக்கில் கோயில்குஞ்சுக்குளம், பாலமோட்டை, மகிழங்குளம், பனிக்கங்குளம், சேமமடு, புளியங்குளம், கனகராயன்குளம், நெடுங்கேணி, பட்டிக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் தமிழீழ சுகாதார சேவைகளின் பற்சிகிச்சைப் பிரிவினரால் பற்சுகாதார மேம்பாட்டு மாதத்தை முன்னிட்டு பற்சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல் அடைத்தல், பல் பிடுங்குதல், தூய்மையாக்கல் என்பவற்றுடன் சுகாதாரக் கருத்தரங்கும் வழங்கப்பட்டது. (த-355)

# கலைபண்பாட்டுக் கழகத்தினால் 'ஈரத்தீ' திரைப்படம் வெளியீடு

பரந்தரன்,மார்ச்2

தமிழீழ மகளிர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் உருவாக்கப்பட்ட 'ஈரத்தீ' முழு நீளத்திரைப்படம் அறிமுக விழா கடந்த 25 ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் மகளிர் போராளி நிமலாவின் நெறியாழ்கையில் இத்திரைப்படம் உருவாக்கப்பட்டது.

தமிழீழத் தேசியக் கொடியை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நிதர்சன நிறுவனத்தின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் பிரமிளா தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் 'ஈரத்தீ' திரைப்பட அறிமுகவுரையைத் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

தொடர்ந்து திரைப்படப் பிரதியைப் புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா. தமிழன்பன் வெளியிட்டு வைக்க மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன். தியாகம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து திரைப்படத்தில் நடித்தவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பரிசில்களைத் தமிழீழ கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தலைவர் மோகன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். இறுதியாகத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. (த-352-203)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## செட்டியார் தரைவெளிக் கிராமத்தில் தொல்பொருள் சான்றுகள் மீட்பு

கிளிநொச்சி,மார்ச்2

பள்ளிக்குடா செட்டியார் தரைவெளிக் கிராமத்தில் ஆதிக்குடிகள் வசித்தமைக்கான தொல்பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட இந்தக் கிராமத்தில் வீதித் திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தத் திருத்த வேலைகளின்போது ஆதிக்குடிகளின் செங்கல் கட்டடங்கள் அமைந்திருந்தமைக்கான அத்திபார அமைவிடங்கள் வெளிப்பட்டுள்ளன.

குறித்த இடத்திற்கு அண்மையில் கிணறு தோண்டும்போது தொன்மை வாய்ந்த மண்பானை ஒன்றும் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தை ஆய்வு செய்வதனூடகத் தமிழரின் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகள் பல கிடைக்கும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (த-352-202)

## சிறார்களுக்கு பெயர்மாற்றம்

பூநகரி,மார்ச்2

தமிழீழ நிதித்துறையின் தமிழ் மொழிக் காப்புத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட நாவற்குடா கிராமத்தில் 10 அகவைக்குட்பட்ட சிறார்களுக்கான பெயர்களை விடுத்து அவர்களுக்கான தமிழ்ப் பெயர் சூட்டும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது.

முல்லைத்தீவு ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் குமரன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் 10 வரையான சிறார்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டன. (த-403)

# சென்.திரேசா மகளிர் கல்லூரியில் விளையாட்டு முற்றம் திறந்துவைப்பு

## சிறுவர் பாதுகாப்பு நிதிய உதவியுடன் நிறுவப்பட்டது

பரந்தன்,மார்ச்2

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியில் சிறுவர் விளையாட்டு முற்றம், நூலகம், தமிழீழ வைப்பகத்தின் சேமிப்பு அலகு அலுவலகம் என்பவை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் திறப்பு விழா நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி தனபாலசிங்கம் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரைத் தமிழீழ வைப்பக ஆளுமை மேலாளர் க.பாலகிருஷ்ணன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ வைப்பக முதன்மை உள்ளகக் கணக்காளர் சு.ரவீந்திரன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் ம.வீரத்தேவன் ஏற்றினார்.

'விளையாட்டு முற்றத்தின்' பெயர்ப் பலகையைச் சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதி அலெக்சாண்டர் போடர் திரைநீக்கம் செய்துவைக்க விளையாட்டு முற்றத்தை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

நூலகத்தைத் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திறந்துவைத்தார்.

சேமிப்பு அலகின் பெயர்ப்பலகையைத் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி திரைநீக்கம் செய்துவைக்க அலுவலகத்தை மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

விளையாட்டு முற்றம், நூலகம் ஆகியவற்றை அமைப்பதற்கான நிதியுதவியைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-352-202)

## உமையாள்புரம் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம்

பரந்தன்,மார்ச்2

உமையாள்புரம் கிராமத்தில் ஓலைக் குடிசையில் இயங்கிவந்த சரவணன் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத் திறப்புவிழா கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது.

முன்பள்ளியின் பெயர்ப்பலகையை எல்.சிவபாதம் திரைநீக்கம் செய்துவைக்க, முன்பள்ளிக் கட்டடத்தை உமையாள்புரம் ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் கண்ணன் நாடாவெட்டித் திறந்துவைத்தார். (த-352-203)

## அடிக்கல் நடும்விழா

பூநகரி,மார்ச்2

பூநகரிப் பிரதேசத்தின் வலைப்பாடு கிராமத்தில் அமைந்துள்ள ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தின் செயலகத்திற்கான அடிக்கல் நடும் விழா கடந்த 19ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் குறித்த கட்டடத்திற்கான அடிக்கல்லினை பூநகரிப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் நட்டுவைத்தார். இதனைத் தொடர்ந்து குறித்த விளையாட்டுக் கழகத்திற்கான சீருடைகளை வ.யோகேஸ்வரன் அன்பளிப்பாக வழங்கினார். (த-403)

## ஒரு மாதத்தில் 13 பேருக்கு பாம்புக்கடி

புளியங்குளம்,மார்ச்2

நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையில் பாம்புக்கடிக்கு இலக்காகிய 13 பேர் ஜனவரி மாதத்தில் மட்டும் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் மரணமடைந்துள்ளார். பலர் வவுனியா பொது மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது நெல் அறுவடை நடைபெறுவதாலேயே பாம்புக்கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-355)



புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் வீதிக்கு இருமருங்கிலும் உள்ள கடைகள், கட்டடங்கள் இடிக்கப்பட்டு பிரதான வீதி அகலமாக்கப்படுகிறது. இதற்கான வேலைத் திட்டத்தைப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் துரிதகதியில் கனரக வாகனங்களின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர். அதனைப் படங்களில் காணலாம். (படங்கள்: மு.கந்தசாமி)

## பார ஊர்தி உடற்கோப்பு, பாவிக்கப்பட்ட அரிசிஆலை இயந்திர உதிரிகள், இரும்புக் கதிரைகள் விற்பனை

மேற்படி பொருள்கள் கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுவுச் சங்கத் தலைமை அலுவலகத்தில் வைத்து விற்பனை செய்யப்படவுள்ளன. எனவே இப்பொருள்களைக் கொள்வனவு செய்யவிரும்புவோர் அலுவலக கடமைநேரத்தில் பார்வையிட்டு, அதற்கான படிவத்தினைப் பெற்று தங்கள் கேள்வி விலைகளை குறிப்பிட்டு, 07.03.2006 ஆம் திகதிக்கு முன்னதாக தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். கேள்வி விலைக்கடிதங்கள் 08.03.2006ஆம் திகதி மு.ப 10 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் அனைவரதும் முன்னிலையில் உடைக்கப்பட்டு, கூடிய விலைகளைச் சமர்ப்பித்தவர்களுக்கு அப்பொருள்கள் விற்பனை செய்யப்படும். அதற்கான பணம் உடன் செலுத்தப்படல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
கரைச்சி தெற்கு
ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி-48075)
(21-34-45-42)

## அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 08 . 06 . 1955



உதிர்வு 31 . 01 . 2006

### அமரர் சோமசுந்தரம் உதயகுமாரன்

கடந்த 31.01.2006 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புத் தெய்வம் சோமசுந்தரம் உதயகுமாரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.03.2006) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் திருநாவலூர் எரிஞ்சம்மன்ஆலய முன்றிலிலுள்ள மடத்தில் நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

கந்தவுடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

-குடும்பத்தினர்.

(47336)

## உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான

# சூறாவளிப் பிரசாரத்துக்கு தயாராகின்றார் சந்திரிகா

கொழும்பு, மார்ச்2

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளிப் பிரசாரமொன்றை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் விருப்பம் வெளியிட்டுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்திருக்கிறார் என அறியமுடிகின்றது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கையில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க கலந்துகொள்ளமாட்டாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின. (க-3)

## புகைப்படக் கண்காட்சி

*ஒளிப்படம் எடுப்பதென்பது ஒரு தொழில் முறையாகவும் பொழுதுபோக்காகவும் மாறியுள்ள சூழலில் அதை ஒரு கலையாகவும் வரலாற்று ஆவணமாகவும் வளர்ப்பது அவசியமாகின்றது. இதனால், இக்கலையை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு ஒளிப்படக் கண்காட்சி ஒன்றை நடத்த நாம் எண்ணியுள்ளோம். இதன் கருப்பொருள் '' சூழல் மாசடைதல்'' என்பதாகும். இயற்கையின் சீற்றம், எமது அவதானமின்மை, சமூக நடவடிக்கைகள் போன்ற பல காரணங்களினால் சூழல் மாசுறும் காட்சியினை இந்த ஒளிப்படம் எடுத்துக்காட்டும். இதன் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும். கிடைக்கும் படங்களை காட்சிப்படுத்தி, சிறந்த படங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.*

*போட்டி நிபந்தனைகள்:*

1. *வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எவரும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.*
2. *எத்தனை படங்களையும் ஒருவர் அனுப்பி வைக்கலாம்.*
3. *4 R அளவுடையதாகவும் கலர்ப்படங்களாகவும் இருத்தல் வேண்டும்.*
4. *எடுக்கப்பட்ட இடம், படம் குறிக்கும் கருத்தும் படத்தின் பின் புறத்தில் அல்லது வேறு ஒரு தாளில் (கழராதவாறு) குறிக்கப்படவேண்டும்.*
5. *படங்கள் மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.*

*அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:*

**உதவிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி அமைச்சு**
**வ.கி.மா.**

*ஆர்.தியாகலிங்கம்,*
*செயலாளர்,*
*கல்வி அமைச்சு, வ.கி.மா.*

*(F/48109)*
*(51-34-45-42)*

## வருடாந்த உற்சவம்

நல்லூர்,மார்ச் 2

நெடுந்தீவு மேற்கு, கரமத்தை கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

13ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா, தீர்த்த உற்சவம் ஆகியவை இடம்பெறும். தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும். (3-111)

## சமுர்த்தி வங்கி இடம்மாறியது

தென்மராட்சி,மார்ச் 2

நுணாவில் கிழக்கு, ஐயர் வீதியில் இயங்கி வந்த சாவகச்சேரி வலய சமுர்த்தி வங்கி தற்போது சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக உள்ள விநாசித்தம்பி வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருவதாக வலய சமுர்த்தி முகாமையாளர் நகுலதாஸ் தெரிவித்தார். (3-117)

## அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் சங்கம் அமைப்பு

சுழிபுரம்,மார்ச் 2

யாழ்.மாவட்டத்தில் அரச சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கான சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கத்தின் அங்குரார்ப்பண வைபவம் கடந்த 19ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் தலைவராக கே.பற்குணராசாவும் செயலாளராக கே.கோகுலனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போசகராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் நியமிக்கப்பட்டார்.

அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்ட பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அவற்றைத் தெரியப்படுத்தும் நோக்குடன் இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.(3-24-13)

## ஆசிரியர்களுக்குச் செயலமர்வு

தென்மராட்சி,மார்ச் 2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் பாட பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் ஆசிரியர்கள் புள்ளிப் பகுப்பாய்வினை எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் செயலமர்வில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், மூன்றாவது பரீட்சை மதிப்பீட்டுக்குரிய ஆயத்தங்களுடன் வருகை தருமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (3-117)

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

ஆலையடிவேம்பு, மார்ச் 2

அக்கரைப்பற்று, கோளாவில் முதலாம் பிரிவில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

40 வயதான ஆறு பிள்ளைகளின் தந்தையாகிய கனகசபை லோகநாதன் என்பவரே யானை மிதித்துப் பலியானவராவார்.

இவர் வழக்கம் போல சாகாமப் பகுதியிலுள்ள பொத்தானை என்னும் இடத்தில் தனது வயல் நிலத்தில் திங்கட்கிழமை இரவு காவல் இருக்கும் வேளையில் காட்டு யானை ஒன்று பிரவேசித்துத் தாக்கியதால் அந்த இடத்திலேயே மரணமானார் என அக்கரைப்பற்று பொலீஸார் கூறினர்.

பொத்தானை வயல் பகுதியில் இந்த வருடத்தில் இரு விவசாயிகள் இவ்வாறு யானைகளால் தாக்குண்டு அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளனர். அது மட்டுமல்லாது அம்பாறை மாவட்டத்தின் காட்டுப் பகுதிகளை அண்டியிருக்கும் குடிமனைகளையும் பயிர்களையும் அழித்துச் சேதப்படுத்தியுள்ளன யானைகள்.

யானைக் கூட்டங்களை வன விலங்குப் பிரதேசத்திற்கு விரட்டுமாறு விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதிலும், எந்தப் பயனும் இதுவரை கிடைக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள். (க-3)

## North East Youth Action Organization (NEYAO)

### Call for Applicants for the position of

## Project Manager and Technical Officer

**NEYAO, with funding from FIFA will be constructing eight football training centres in seven districts in the NorthEast. It is also in the process of finalizing the projects to build Youth Centres with financial contribution from Save the Children in SriLanka, UNICEF, UNDP and other organizations. Candidates who wish to apply for the positions listed below should be prepared ro attend an interview in Kilinochchi if they are short listed. Interview for the Project Manager will be in English. The education and other requirements for the positions are as follows:**

**Project Manager.**

1. A pass or better in B.Sc. or B.A. degree in computer science, management, commerce, economics, English or geography from a recognized university. Those without a degree but have a post - secondaty qualification and five or more years of work experience and are **competent in the skills listed below** will be considered for the interview.
2. Very good knowledge in English language enough to write or assist in writing project proposals, periodic progress and evaluation reports. Communicate in English with those who do not know Tamil, in person, through telephone and email.
3. Very good knowledge of Microsoft Office applications including typing skills (at least 20 words per minute), use of Word, Excel and Power Point.
4. One or more years of fulltime work experience is preferred but not mandatory.
5. Demonstrated dedication to development work in the NorthEast is required.
6. The selected candidate will assist Volunteer Consultant Dr.N.Ethirveerasingam and should be prepared to take over his responsibilities at the end of 2006.

**Technical Officer**

1. A three year Diploma from a recognized Technical College. Those with a two year Certificate will be considered if they have at least five years of work experience related to their Certificate.
2. Competent in the use of CAD.
3. Ability to determine and prepare a BOQ for permanent concrete buildings.
4. Ability to use survey instruments to determine slopes and construct level fields.
5. Able to visit building sites and supervise progress of the projects and meet the building schedules.
6. Should have licence to operate a motorcycle. Possession of a motor cycle is an advantage.
7. Knowledge of English good enough to communicate verbally and in writing with those who do not speak English, and write monthly progress reports.
8. Computer skills in using Word and Excel in addition to CAD.

**Conditions**

1. Salary for each of the positions is Rs.15,000. per month.
2. Only those who are willing to sign a binding contract for one year should apply.
3. Selected candidate should be willing to travel extensively to project sites in all Districts in the NorthEast.

may be required occasionally, iii). Four weeks of leave can be taken during one year but only two weeks can be continuous at the end of 11 months, and iv). Willing to take up appointment within one week of the offer.

**Application Guideline**
**Include:**

1. Typed Application Letter, not more than two short paragraphs, in English, stating the position you are applying for and the titles of your qualifications.
2. Photocopies of the original certificates, diplomas and degree you have obtained from the GCE 'A' Level onwards.
3. One page typed Bio-data, in English, listing telephone number and address where we can contact you, qualifications starting with the 'A' Level, employment lists if any, and names addresses and telephone numbers of two referees, with their permission, who are not close relatives, but one of whom should be your lecturer.

**Applications for both positions close on March 15,2006**

# தென்மராட்சிக் கோட்ட பெருவிளையாட்டுகளில் சாவகச்சேரி இந்து நான்கு பிரிவுகளில் முதலிடம்

தென்மராட்சி,மார்ச் 2
தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட வலய மட்டத்திலான பெருவிளையாட்டுக்களில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி நான்கு பிரிவுகளில் முதல் இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**கரப்பந்தாட்டம் - ஆண்கள்**

**15 வயதுப் பிரிவு**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

**17 வயதுப் பிரிவு**

கொடிகாம்ம் திருநாவுக்கரசு ம.வி., கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., மட்டுவில் சரஸ்வதி வித்தி.

**19 வயதுப் பிரிவு**

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி., கைதடி முத்துக்கும்ாரசுவாமி ம.வி.

**பெண்கள்**

**15 வயதுப் பிரிவு**

கைதடி நாவக்குளி அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம் - பெண்கள்**

**15 வயதுப் பிரிவு**

கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி.

**19 வயதுப் பிரிவு**

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., வரணி ம.வி.

**மேசைப் பந்து - பெண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.,

**ஆண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.

**பூப்பந்து - ஆண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி.

**பெண்கள்**

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி. (3-117)




## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்2
உடுவில் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை இதில் கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (த-190)

## தென்மராட்சி வலயத்தில் கரப்பந்தாட்ட, சதுரங்கப் போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 2
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 17 வயது பிரிவுப் பெண்களுக்கான கரபந்தாட்டம், 15,19 வயது பிரிவு ஆண்/பெண்களுக்கான சதுரங்கம் ஆகியவற்றுக்கான வலய மட்டப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறவுள்ளன.

அணிகளுக்கிடையிலான கரபந்தாட்டப் போட்டிகள் சனியன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

15,19 வயது ஆண்கள் பிரிவுக்கான சதுரங்கப்போட்டிகள் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கும்-

15,19 வயது பெண்கள் பிரிவுக்கான சதுரங்கப் போட்டிகள் மறுநாள் காலை 8.30 மணிக்கும் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (3-117)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 2
கைதடி எருதிடல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப.1.30 மணிக்கு அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) த.ஸ்ரீஸ்கந்தராசாவும் கலந்துகொள்வர். (3-117)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 2
வீமன்காமம் மகாவித்தியாலய இணைந்த பாடசாலைகள் நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியால அதிபர் தி.கங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் பிரதம விருந்தினராகவும் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-13)

# சண்டிலிப்பாய்க் கோட்ட கரபந்தாட்டத்தில் 3 பிரிவுகளில் சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

சண்டிலிப்பாய் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே 15,17,19 வயது அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மூன்று பிரிவுகளிலும் முதலிடம் பெற்றுக் கோட்டச் சம்பியனானது.

நேற்றுமுன்தினம் இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

வெற்றிபெற்ற அணிகள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம், மானிப்பாய் மெமொறியல். (3-190)



கிராஞ்சி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பாடசாலை முதல்வர் ஐ.கேசவன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளையையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முழங்காவில் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழரசனையும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மாணவர் அமைப்பைச் சேர்ந்த கெங்கனையும் படத்தில் காணலாம். (படம்: முழங்காவில் செய்தியாளர்)

# வன்னிப் பாடசாலைகளில் சிறப்புற நடந்த போட்டிகள்

பரந்தன், மார்ச் 2
கிளிநொச்சி புனித பற்றிமா றோமன்கத்தோலிக்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் அருட்சகோதரி திரேசா சில்வா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராசா கலந்து கொண்டார். (த-352-203)

* * *

கிளிநொச்சி, மார்ச்2
கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலைப் பிரதி அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமாரன் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (த-307-203)

* * *

ஒட்டுசுட்டான், மார்ச் 2
கற்சிலைமடு அ.த.க.பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வாரம் பாடசாலை முதல்வர் ஜீவஜீலன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் தமீழத் தேசியக் கொடியைப் பிரதேச மக்கள் கட்டுமாணப் பயிற்சி ஆசிரியர் குட்டியரசன் ஏற்றிவைக்க பாடசாலைக் கொடியை பாடசாலை முதல்வர் ஏற்றி வைத் தார்.

வலயக் கல்விப் பிரதி உடற்பயிற்சிப் பணிப்பாளர் திருமதி வ.சந்திரபாலன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிப் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் பொ.அருமைச்சந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார். (த-341-203)

***

ஒட்டுசுட்டான், மார்ச் 2
ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டு திறனாய்வுப் போட்டி அண்மையில் பாடசாலை முதல்வர் சி.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் சிவன் ஆலய பிரதமகுரு ஆசியுரை வழங்கி விளையாட்டுகளை ஆரம்பித்து வைத்தார். (த-341)



சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நிற்க, பாடசாலை மற்றும் இல்லங்களின் கொடிகள் ஏற்றப்படுவதைப் படத்தில் காணலாம். (படங்கள்: வலி.வடக்குச் செய்தியாளர்)

## பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்2
யாழ்.வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன என யாழ்.உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.குமாரசுவாமி தெரிவித்துள்ளார். (3-190)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்2
கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இப்போட்டியில் 34 கழகங்கள் பங்குபற்றுகின்றன என விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். (3-190)

## விண்ணப்ப முடிவு திகதி நாளை என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்2
கரவெட்டி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிக்கான விண்ணப்பங்களை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் செயலகத்தில் ஒப்படைக்குமாறு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (த-190)

## கொக்குவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்2
யாழ்.வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. (3-190)

## முதலிடம் பெற்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம்,மார்ச்2
யாழ்.வலய மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சென்.ஜோண்ஸ் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தினை யாழ்.மத்திய கல்லூரியும் மூன்றாவது இடத்தினை சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் பெற்றுள்ளன.(3-190)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்2
நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைக்கு இடையில் நடத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தினை கொக்குவில் இந்துக் கல்லூரியும் மூன்றாவது இடத்தினை கனகரெட்ணம் மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன. (3-190)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்2
கோப்பாய் கோட்ட மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி இரண்டாவது இடத்தையும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. (3-190)

* * *

யாழ்.கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வந்த மென்பந்துச் சுற்றுப்போட்டியில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றது.

நாவாந்துறை ஆர்.சி.வித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன. (3-190)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

# கேள்வி கோரல்கள்

## சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்பிற்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின்(SIRUP) கீழ் உள்ள வேலைகள்
## சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள்
## உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

## மானிப்பாய் – கைதடி வீதி [11+000–13+670] கி.மீ பகுதியை புனர்நிர்மாணம் செய்தல்

01. பொது முகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மானிப்பாய் - கைதடி வீதியின் (11+000-13+670) கி.மீ பகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கான மூடிய கேள்விகோரல்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கேள்விச் சபையின் சார்பாகப் பெற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 29.03.2006 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்கள் மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அலுவலகத்தில் கிடைக்கும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்திற்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் 06.03.2006 தொடக்கம் 27.03.2006 வரை மீள்அளிக்கமுடியாத கேள்வித்தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெறவேண்டும்.

02. நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகார சபையாகும்.

03. தகுதிவாய்ந்த கேள்விகோரல்களை கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையியல் தரம் எம்-05 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ) கேள்வி கோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. கேள்விகோரல் ஆவணங்களை (மாகாணப் பணிப்பாளர், வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்/வவுனியா) அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

05. கேள்விப் பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாகும்.

06. ரூபா இருநூறாயிரம் (200,000.00) பணத்தொகைக்குரிய கேள்விப் பாதுகாப்பு பத்திரம் கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைந்திருத்தல் வேண்டும். செல்லுபடியாகக்கூடிய பாதுகாப்புப் பணப்பத்திரத்தை கொண்டிராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. முன் கேள்வி கோரல் கூட்டம் 17.03.2006 அன்று காலை 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர், வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

08. மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை முதலாவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

09. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்விகோரல் கோருபவர்கள் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலதிக விவரங்களுக்கு தயவுசெய்து மாகாணப் பணிப்பாளர், வடக்கு/கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா/யாழ்ப்பாணம் அலுவலகங்களுடன் 024-2222826 அல்லது 024-2220679 அல்லது 021-2222517 அல்லது 021-222 2968 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**மோசஸ் மரியதாசன்,**
**மாகாணப் பணிப்பாளர்/வ-கி (வடக்கு)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

R.W.R. பேமசிறி
பொதுமுகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.
(சி-48117)(21.15.17)

## பொன்னாலை வரதராஜர் இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம்,மார்ச்2

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். காலை 9 மணிக்கு இடம்பெறும் அபிசேக பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பூசையைத் தொடர்ந்து 3.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் பிற்பகல் 3 மணிக்கு மஹாலட்சுமிக்கு விசேட பூசை தீப பூசை என்பனவும் நடைபெறும்.

(த-15)

## நவாலியில் கமநல நிலையம்

யாழ்ப்பாணம்,மார்ச்2

நவாலி - டச்சு வீதியில் நவாலி கமநல சேவைகள் நிலையம் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை யாழ். மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் மேற்கொண்டுள்ளார்.

நவாலி டச்சு வீதியில் அமைக்கப்படவுள்ள புதிய கமநல சேவைகள் திணைக்களத்திற்கான 4 பரப்புக் காணியை மானிப்பாய் சட்டத்தரணி இ.வசந்தசேனன் இலவசமாக வழங்கியுள்ளார். இந்த புதிய கமநல சேவைகள் நிலையம் 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

(த-185)


## நந்தி ஓடுகள்

இலங்கை மக்களின் ஏகோபித்த தெரிவான நந்தி ஓடுகள் விற்பனைக்கு யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டுள்ளோம்.

நந்தி மார்க் ஓடுகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**லக்ஸ்மி ரேடேர்ஸ்,**
*274, கண்டிவீதி,*
*சாவகச்சேரி.*

(சி.48114) (39.17.15)



*வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்*

## சென்றல் - சென்.ஜோண்ஸ்
## 100ஆவது போட்டி

மார்ச் 9, 10, 11ஆம் திகதிகள்

*யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளின் போது*

*** ஐஸ்கிறீம், குளிர்பான வியாபாரம்**
*** சிற்றுண்டி வியாபாரம்**

*செய்ய விரும்புபவர்கள் அதற்கான விண்ணப்பத்தை யாழ். மத்திய கல்லூரி பெருந்துடுப்பாட்ட முகாமைத்துவக் குழுப் பொருளாளரிடம் இம்மாதம் 5 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்து அதற்கான அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளவும்.*

அதிபர் அதிபர்
சென்.ஜோண்ஸ் கல்லூரி. (சி/48095) (21.15.17) யாழ்.மத்திய கல்லூரி.


## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் பொருளாளர்
திரு.வீரசிங்கம் புஸ்பநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சிவபாக்கியம் வீரசிங்கம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கணேசா சனசமூக நிலையம்,
உடும்பிராய் வடக்கு.
-நிர்வாக உறுப்பினர்கள்
(47448)(21.17.45)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 - 04 - 1917



மறைவு 31 - 01 - 2006

**திருமதி ஏரம்பு நாகம்மா**

திங்கள் ஒன்றைக் கடந்தபோதும்
உங்கள் நினைவுகள் நெஞ்சை விட்டு நீங்கவில்லை!

*அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பலவழிகளில் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (02.03.2006) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.*

ஸ்ரீகணேச வாசா,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
(47450)(21.

திருமதி தியாகராசா குடும்பம்,
திரு. திருமதி அழகராசா குடும்பம்,
திருமதி நற்குணராசா குடும்பம்,
திரு. திருமதி செல்வராசா குடும்பம் (புத்தளம் ஸ்டார்).

## வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2006

## மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

*மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 16-03-2006 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது இப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

தலைவர்,
பொ.இராசகுமார்,
ம.க.தொ.கூ.சங்கம்,
எரிஞ்சம்மன் கோயிலடி,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

(47449)
(26.21.15.17)

செயலாளர்
செ.சுகுமார்,
ம.க.தொ.கூ.சங்கம்,
எரிஞ்சம்மன் கோயிலடி,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

# ஜெனீவாப் பேச்சுகளில் சர்வதேச ஆதரவு அலை புலிகள் பக்கம் வீசியமை ஒரு 'பிளஸ் பொயின்ட்!'

விடுதலைப்புலிகள் அமைப்பு, சுதந்திரத்துக்காகப் போராடும் ஆயுதம் தாங்கிய போராளி இயக்கம். அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்தின் பார்வையில் அது ஒரு பயங்கரவாத அமைப்பு.

இந்தப் பின்னணியில் -

வழமையான சமாதான முயற்சிகளின் போதும் சரி, யுத்த நடவடிக்கைகளின் போதும் சரி சர்வதேச சமூகத்தின் கரிசனை சட்ட ரீதியான ஒரு நாடு என்ற வகையில் இலங்கை அரசுக்கு சார்பானதாகவும், 'பயங்கரவாத இயக்கம்' என்ற வகையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகவும் அமைவது கண்கூடு.

ஆனால், ஜெனீவாவில் நடந்துமுடிந்த பேச்சுகளின் நிலைமை தலைகீழாக இருந்தது. புலிகளின் நிலைப்பாட்டுக்கு சர்வதேசப் போக்கு ஆதரவாக இருந்தமை புலிகளுக்குக் கிடைத்த ஒரு 'பிளஸ் பொயிண்ட்'. பேரம் பேசும் நடவடிக்கைகளில் புலிகள் விடாப்பிடியான நிலைப்பாட்டைக் கைக்கொள்ளவும், இணங்கிவராவிட்டால் வெளிநடப்புச் செய்வோம் என்று புலிகள் அவ்வப்போது மிரட்டவும், அதற்கு அரசுத் தரப்புப் பணிந்து போகவும் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக இருந்தது இந்த சர்வதேச ஆதரவு அம்சம்.

## வந்தார்கள்

அதனைப் பார்க்க முன்னர் -

ஜெனீவாவில் பேச்சுகளின் பின்னர் - அடுத்த நாள் - சாட்டேடி பொய்ஸி அரண்மனையில் குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்களைச் சந்தித்த சமயம் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த ஒரு கருத்தை நாம் நோக்குவது பொருத்தமானது.

''இலங்கை அரசுடன் நீங்கள் இணங்கிப் போகும் ஒரு முடிவுக்கு வந்தமைக்கு சர்வதேச அழுத்தம் காரணம் எனக் கூறலாமா?'' - என்று ஒரு செய்தியாளர் கேட்டார்.

''விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை - கடந்த கால நடவடிக்கைகளை - சரியாகக் கவனத்தில் கொண்டவர்கள் யாரும் இப்படிக் கூறமாட்டார்கள். எமது கொள்கைகளிலும், இலட்சியத்திலும் என்றும் மாறா உறுதியையும், திட சங்கற்பத்தைக் கொண்டவர்கள் நாம். இந்தியாவோ அல்லது அமெரிக்கா போன்ற வல்லரசோ அழுத்தம் கொடுத்து அதற்காக நாம் எமது கொள்கை நிலைப்பாட்டிலிருந்து விலகினோம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இத்தகைய மிரட்டல் ஏதும் எம்மிடம் செல்லுபடியாகாது. ஆகவே, சர்வதேச சமூகத்துக்கும் நன்கு தெரியும்'' என்ற சாரப்பட பதிலடி தந்தார் பாலா.

அது உண்மைதான்

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் என்ற விவகாரத்துக்காக இறங்கியோ, கிறங்கியோ போகின்றவர் அல்லர் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். கடந்த கால நிகழ்வுகள் - சம்பவங்கள் - அதனைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்குப் பணிந்து போகாத புலிகள், சர்வதேச சமூகத்தின் ஆதரவை ஜெனீவாப் பேச்சுகளில் வசமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதுதான் உண்மை.

மூன்று வருடங்களின் பின்னர் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை அதிகம் ஈர்த்திருந்தன. நேரடியாகப் பேசுங்கள், பேசுங்கள் என்று கடந்த மூன்று வருட காலமாக நச்சரித்து வந்த சர்வதேச சமூகம் இந்தப் பேச்சுகளை - அதன் போக்குகளை - 'கண்கொத்திப் பாம்பாக' அவதானித்துக் கொண்டிருந்தது என்பதும் முற்றிலும் நிஜம்.

ஏதோ இந்தப் பேச்சுகளில் நோர்வேத் தரப்பு வெறும் அனுசரணையாளர்கள் என்ற அந்தஸ்தோடு மட்டும் அமைந்திருந்தாலும் - அமர்ந் திருந்தாலும் - சர்வதேச சமூகத்தின் பார்வையும், நோக்கும், கருத்தும் கூட நோர்வே ஊடாக முழு அளவில் பேச்சு மேசை மீது விழுந்திருந்தன.

அனுசரணைத் தரப்பு என்ற வகையில் இந்தப் பேச்சுகளின்போது சில விடயங்களில் தலையிட்டு நோர்வே கருத்து வெளியிட்ட போதெல்லாம் அது சர்வதேச சமூகத்தின் கருத்து நிலைப்பாடாக அமைந்ததை இந்தப் பேச்சுகளில் கலந்து கொண்ட இரு தரப்புப் பிரதிநிதிகளுமே உணராமல் இருக்கவில்லை.

**ஜெனீவாப் பேச்சு — ஓர் ஊடகவியலாளனின் பார்வையில்! 4**

ஜெனீவாவில் பேச்சுக்கான நோக்கம் குறித்து சர்வதேச சமூகம் கொண்டிருந்த நிலைப்பாடும், அது தொடர்பாக பேச்சுகளின்போது சர்வதேச சமூகக் கருத்தியலைப் பிரதிபலிப்பது போன்று நோர்வேத் தரப்பு கைக்கொண்ட நிலைப்பாடும் பேச்சுகளில் புலிகளின் கையைப் பலப்படுத்தின என்பது பேச்சுகளின் போக்கை நெருக்கமாக அவதானித்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களினால் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய அம்சமாக அமைந்தது.

கடந்த மூன்று வருடங்களாக சர்வதேச சமூகம் வலியுறுத்தி வந்த விவகாரம் என்ன?

அரசும், புலிகளும் நேரடிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். அதுவும் சிதைவடைந்து, கேள்விக்குள்ளாகி வரும் யுத்தநிறுத்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்தி வன்முறைகள் இடம்பெறாமல் தவிர்ப்பது குறித்தே இரு தரப்பும் முதலில் பேசவேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகவும், கருத்தாகவும், வற்புறுத்தலாகவும் அமைந்திருந்தது.

இதைத்தான் விடுதலைப் புலிகளும் ஒரே பிடியாக பிடித்



துக்கொண்டு நின்றார்கள். பேசினால் - யுத்த நிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவது குறித்துப் பேசுவது; இல்லையேல் பேச்சு மேசையிலிருந்து வெளிநடப்புச் செய்வது என்ற தொனியில்தான் விடுதலைப் புலிகள் விடாப்பிடியாக நின்றார்கள். இந்தக் காரணத்துக்காக விடுதலைப் புலிகள் பேச்சு மேசையிலிருந்து வெளியேறினால் அது சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டை நிறைவேற்ற முயன்று முடியாத பட்சத்தில் புலிகள் பேச்சிலிருந்து விலகினார்கள் என்ற அர்த்தத்தைத்தானே தரும்?

யுத்தநிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் தமது முயற்சி தோற்றதால்தான் புலிகள் பேச்சிலிருந்து விலகினார்கள் என்ற நிலை உருவாகுமானால் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு தனக்கு எதிராகத் திரும்பும் என்பதை அரசுத் தரப்பு உணர்ந்து கொண்டதால்தான் புலிகள் பிடிவாதம் பிடித்தபோது, விட்டுக்கொடுத்து, தாஜா பண்ணி, சமாளித்துப் போகவேண்டிய நிலைப்பாட்டுக்கு அரசு இறங்கி வரவேண்டியதாயிருந்தது.

பேச்சுமேசையில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டைத் தமக்கு சாதகமாக - லாவகமாக - பயன்படுத்திக்கொள்ள புலிகளின் பேச்சுக் குழுத்தலைவர் அன்ரன் பாலசிங்கம் தவறவேயில்லை.

## வெருட்டினார்கள்

உதாரணத்துக்கு ஒன்றைப் பார்ப்போம்.

அரசுப் படைகளோடு சேர்ந்து தமிழ் ஆயுதக் குழுக்கள் இயங்கவே இல்லை என்று அரசுக் குழுவின் பிரதிநிதி சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா வாதிட்டபோது, அக்குழுக்கள் சுயாதீனமாகத் தம்பாட்டில் இயங்குபவை என்றும் அவற்றை 'துணைப்படைகள்' என்ற சட்டவரையறைக்குள் கொண்டு வர முடியாது என்றும் பிரபலாபித்தார்.

இந்த வாதத்துக்கு ஒரே 'ஷொட்' டில் அடி கொடுத்தார் பாலசிங்கம்.

''இலங்கை இனப்பிரச்சினையை சர்வதேச சமூகமுமே பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியம், வல்லரசான அமெரிக்கா மற்றும் ஜப்பான், நோர்வே ஆகிய நான்கு தரப்புகள் அடங்கிய இணைத் தலைமை நாடுகளின் கருத்தை சர்வதேச சமூகத்தின் கருத்தாகக் கொள்ள முடியும். இந்த இணைத் தலைமை நாடுகள் நான்கும் அண்மையில் வெளியிட்ட இரண்டு அறிக்கைகளிலும் இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

''வடக்கு-கிழக்கில் துணைப் படையாக இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்க்ள் களையப்பட்டு அவை அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற யுத்த நிறுத்த உடன்பாட்டு வாசகங்களை இணைத் தலைமை நாடுகள் இந்த இரண்டு அறிக்கைகளிலுமே வலியுறுத்திக் கூறியுள்ளன.

''அவை, இந்த ஆயுதக் குழுக்கள் 'துணைப்படைகள்' என்று தெரியாமலா அவற்றை 'துணைப்படைகள்' என்ற பெயரில் தமது அறிக்கை களில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றன? இந்த சர்வதேச சமூகத்துக்கு 'துணைப்படைகள்' என்றால் என்னவென்று விளங்கவில்லை - சட்ட அர்த்தம் புரியவில்லை - என்று அரசுப் பிரதிநிதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா கருதுகின்றாரா? துணைப் படைகள் இயங்குகின்றன என்ற உண்மை - நிஜ நிலைமை - சர்வதேச சமூகத்துக்கும் நன்கு தெரியும். அதை மூடி மறைத்து, சர்வதேச சமூகத்துக்கும் புதிய தொனியில் சட்ட வியாக்கியானம் கொடுக்க முனைவது முட்டாள்தனம். சட்ட வியாக்கியானத்தை விடுத்து அரசியல் பேச வாருங்கள்!'' - என்று எச்.எல்.டி. சில்வாவை வாயை மூட வைத்தார் பாலா.

சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு, ஜெனீவாப் பேச்சில் புலிகளுக்கு உதவிய சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

இதைப்போலவே யுத்தநிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்து மட்டுமே பேச முடியும் என்று புலிகள் வலியுறுத் திய போதும் -

பின்னர், ஜெனீவாப் பேச்சின் முடிவில் கூட்டறிக்கை வெளியிடுவது தொடர்பான சர்ச்சை கிளப்பப்பட்ட போதும்-

அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் புலிகளின் நிலைப்பாட்டுக்கு சார்பாகப் பக்கம் எடுத்து, சர்வதேசக் கருத்தைப் புலிகளுக்கு சார்பாகப் பிரதிபலிக்க வைத்தமை இந்தப் பேச்சுகளில் புலிகளைப் பொறுத்தவரை முக்கிய அம்சமாகும்.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதை ஸ்திரப்படுத்துவது குறித்தே ஜெனீவாப் பேச்சுகளில் ஆராயப்பட வேண்டும், அதுவே அப்பேச்சுக்கான ஒரேயொரு நிகழ்ச்சி நிரல் என்ற புலிகளின் நிலைப்பாட்டை அனுசரணையாளர்களான நோர்வே முழு அளவில் ஆதரித்து நின்றமை - அதை சர்வதேசக் கருத்தாகப் பிரதிபலித்தமை இந்தப் பேச்சுகளைப் பொறுத்தவரை புலிகளுக்கு பெருவெற்றியையும், அரசுத் தரப்புக்கு பெரும் பின்னடைவையும் தந்தது என்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த வியாழனன்று- பேச்சுகளின் இரண்டாம் நாள் - அரசுத் தரப்பு பேச்சுக்குழுவில் ஒருவரான பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ பெரிய கோவைகள் (பைல்கள்) அடங்கிய கட்டுகளோடு பேச்சுமேசையில் வந்து அமர்ந்தார். அவர் நீட்டி முழக்கத் தொடங்கினார்.

விடுதலைப் புலிகள்மீது சரமாரியாகக் குற்றச்சாட்டுகளை அடுக்கினார் அவர். ''சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற எமது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை யுத்த நிறுத்த காலத்தில் புலிகளே கொன்றனர். - அக்கொலைக்குப் பயன்படுத்திய ஆயுதத்தில் கொலையாளியின் கைவிரல் அடையாளங்கள் பதிந்துள்ளன. அவற்றை நாம் வைத்திருக்கிறோம். கொலையாளி வன்னிக்குள் பதுங்கியிருக்கிறார். ஒரு நாள் அவர் எம்மிடம் சிக்குவார்.

''யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா முதல் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

''யுத்த நிறுத்த காலத்திலும் இவ்வாறு பலர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.'' - இப்படித் தெரிவித்த பொலீஸ் மா அதிபர் இக்காலகட்டத்தில் கொலையுண்ட பல பிரமுகர்களின் பட்டியலை நீட்டி அடுக்கிக் கொண்டே போனார். அவற்றுக்கான குற்றச்சாட்டுகளை புலிகள்மீது அவர் சுமத்தினார்.

புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் கொலை பற்றி பிரஸ்தாபித்த இலங்கைப் பொலீஸ்மா அதிபர் அக்கொலைச்சம்பவத்துடன் புலிகளுக்கு நேரடித் தொடர்புள்ளது என்ற சாரப்பட கருத்துத் தெரிவிக்க முயன்றபோது பெரிய சிரிப்பு ஒன்றை நக்கல் பதிலாக வெளியிட்டார் பாலசிங்கம்.

ஒருகட்டத்தில் பொலீஸ்மா அதிபரின் கருத்துரை நீண்டு செல்வதைச் சுட்டிக்காட்டி அதை நிறுத்தச்செய்த பாலா, அவருக் குப் பதிலடி கொடுக்கத் தொடங்கினார்

### பாலாவின் பதிலடி

''இது என்ன பொலீஸ் நிலையமா? பொலீஸ் நிலையை விசாரணைகள், கைதுகள், விடுவிப்புக்ள் எப்படி நடக்கின்றன என்பன எமக்குத் தெரியும். அந்த உருட்டல், புரட்டல்கள் எல்லாம் அமைதித்தீர்வு காண்பதற்கான இந்த சமாதானப் பேச்சு மேசைக்கு உதவா.

விடுதலைப் புலிகள் இயக்கம் கொலைகளே செய்யாத புனித அமைப்பு என்ற தோரணையில் இங்குவந்து அமர்ந்திருப்பது போலவும் -

அது தவறு என்று குற்றம் சுமத்துபவர் போலவும்-

பொலீஸ் மா அதிபர் விளக்கமளிக்க முயல்கின்றார்.

நாங்கள் விடுதலைப் போராட்ட அமைப்பு. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் கொலைகளுக்கும் இடமுண்டு. ஏதோ எமது இயக்கம் கொலைகளே செய்யாத புனித இயக்கம் என்று உறுதிப்படுத்த நாம் இங்கு வரவில்லை.

விடுதலைப் போராட்டத்தைக் குழப்பமுயன்ற - காட்டிக் கொடுத்த - அதற்கு மாசுகற்பித்த -பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

சண்டைகளில் குறைந்தது இருபதாயிரம் அரச படைகளையாவது எமது இயக்கம் கொன்றிருக்கின்றது.

அதேபோல, சிங்கள அரசும் எமது போராளிகள் இருபதாயிரம் பேரைக் கொன்றிருக்கிறது. ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்களைத் கொன்றொழித்திருக்கிறது. பெருமளவு உடைமைகளை - தமிழர்களின் வாழ்வியல் கட்டுமானங்களை - நாசமாக்கியிருக்கின்றது.

அப்படிப் பார்த்தால் இலங்கைப் பொலீஸ்மா அதிபர்

## வென்றார்கள்!

கொண்டுவந்த 'பைல்' கட்டுகளை விட பல மடங்கு விடயங்கள் அடங்கிய 'பைல்' கட்டுகளை நாம் இங்கு கொண்டு வந்திருக்க முடியும்.

அரச படைகளாலும், அவற்றுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளாலும் கொன்றொழிக்கப்பட்ட மக்களின் பெயர்ப்பட்டியலை இங்கு நாமும் அடுக்க முடியும். அப்படி அடுக்கினால் பொலீஸ் மா அதிபர் இங்கு கூறியவற்றை விட அவற்றின் நீளம் அதிகமாக இருக்கும்.

கதிர்காமர் கொலையாளியைப் பிடிக்காமல் - அதற்குப் புலிகள்தான் காரணம் என்றால் நாம் என்ன கூறமுடியும்? கொலைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்காமல் - புலிகள் மீது குற்றம் சுமத்துவது அழகல்ல.

கதிர்காமர் கொலை பற்றிய விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். அதற்கிடையில் - கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முன்னர் - எம்மீது குற்றம் சுமத்து

ஜெனீவாப் பேச்சுகளில் நடந்தவை என்ன? உள்வீட்டு விடயங்களை ஜெனீவாவிலிருந்து திரட்டித் தருகின்றார் ஊடகவியலாளர்
ந.வித்தியாதரன்

கின்றீர்களே என்று நான் கேட்டபோது, ''கதிர்காமர் கொலை மட்டுமல்ல, யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா, தியாகராஜா எம்.பி. ஆகியோரின் கொலை மர்மம் கூட இன்னும் துலங்கவேயில்லை'' - என்று பொலீஸ்மா அதிபர் கூறுகின்றார்.

துரையப்பாவைக் கொன்றது எங்கள் அமைப்புத்தான். அதை எப்போதோ நாம் அறிவித்துவிட்டோம். அது தெரியாமல் - புரியாமல் - இதை இங்கு பேசுகின்றார்.

அதுபோல, பொலீஸ்மா அதிபர் இங்கு கூறிய பல கொலைகள் குறித்து ஏற்கனவே விடயங்கள் - உண்மைகள் - வெளியாகிவிட்டன.

அவை எவற்றையும் அறியாமல் பொலீஸ்மா அதிபர் இங்கு கண்மூடித்தனத்தோடு நீட்டி முழக்குகின்றார்.

உங்களுக்கு (பொலீஸ்மா அதிபருக்கு) விடுதலைப் புலிகளின் சரித்திரம், கடந்தகால சம்பவங்கள் எவையும் தெரியவில்லை. முதலில் அதை அறிந்துகொண்டு வந்து இத்தகைய பேச்சுகளில் பங்குபற்றுங்கள். அப்போதுதான் அர்த்தமுள்ள வகையில் பேசமுடியும். (13ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய கட்டடத் தொகுதி இன்று திறப்பு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது புதிய கட்டடத் தொகுதி ஒன்று இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் புதிய கட்டடத் தொகுதியை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு 4ஆம் திகதி இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நட்டுவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-13)

## திறந்த பல்கலைஆசிரியர் பயிற்சிக்கான பதிவுகள் நாளை

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படவுள்ள பாலர் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பதிவுகள் நாளை வெள்ளிக்கிழமை திறந்தபல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

முன்பள்ளி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த முன்பள்ளி ஆசிரியர்கள் உரிய காலப்பகுதியில் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலை பொறுப்பதிகாரி எந்திரி ஏ.எஸ். ஞானேந்திரன் அறிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக மட்டத்திலான முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒருவருடப் பயிற்சிநெறி இந்த வருடத்தில் முதன் முதல் ஆரம்பிக்கப்படுகின்றது. இதில் நூறு ஆசிரியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட விருக்கின்றனர். (த-11)

## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு
## [குருப்பட்டம் வழங்குதல்]

**பிரம்மஸ்ரீ ச.சர்வேஸ்வரசர்மா** *(சபா)*
அவர்களுக்கு

இடம்: சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.
நேரம்: மாசி 19ஆம் நாள் (03.03.2006) வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் 7 மணி வரை உள்ள முகூர்த்தத்தில் நடைபெற திருவருள் கூடியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தீக்ஷாகுரு: **சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்**
(சர்வதேச இந்துமத குருபீடாதிபதி)

**பிரம்மஸ்ரீ ச.சர்வேஸ்வரசர்மா**
**ஸ்ரீமதி காதம்பரி தம்பதிகள்**
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
சுதுமலை, மானிப்பாய்.
(47369) (21.34.45)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை பழைய மாணவரும் அபிவிருத்திச் சங்கக் கணக்காய்வாளரும் ஆகிய
**பொ.ஸ்ரீராமச்சந்திரன்** அவர்களின் அன்புத் தாய்
திருமதி **செல்லமுத்து பொன்னையா**
காலமானதையிட்டு, துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
பாடசாலைச் சமூகம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(47372) (39.21.34.45)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

சிம்மம்

759
நீலம்

28-02-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4119392- 4134333

வெற்றி இலக்கங்கள் 12 14 18 36

ஜக்பொட் பரிசு ரூபா 17,14,750/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 72,74,010/-
தொடர் இல. 5043924 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் 2006 மார்ச் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,27,684 | 10/- | 32,76,840/- |
| 2 இலக்கங்கள் | 30,110 | 20/- | 6,02,200/- |
| 1 இல+லக்கினம் | 29,814 | 30/- | 8,94,420/- |
| 2 இல+லக்கினம் | 2,728 | 100/- | 2,72,800/- |
| 3 இலக்கங்கள் | 801 | 500/- | 4,00,500/- |
| 3 இல+லக்கினம் | 75 | 5,000/- | 3,75,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | 0 | 17,14,750/- | 0 |
| மொத்தம் | 5 | | 62,21,760/- |
| முச்சக்கர வண்டிகள் | 3,91,221 | 210,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,74,010/- |

இந்த வெள்ளிக்கிழமை ரூபா 24,46,700/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 4130073-9-47 |
| கண்டி | 4121773-9-46 |
| பொலன்னறுவை | 4128570-3-10 |
| அனுராதபுரம் | 4124279-3-44 |
| அம்பாறை | 4127234-9-16 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03



## உடன் விற்பனைக்கு

உல்லாசப் பிரயாணப் பேருந்து (Tourist Bus) 45 ஆசனங்களுடன் Mitsubisi Fuso ஜப்பான் பஸ் ஆங்கில இலக்கங்களுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
தெ.பே.இல 0713056177
(சி-48127)



## வெளிவந்துவிட்டது

**விற்பனையாகிறது**
2006ஆம் ஆண்டு முதல்
புதிய பாடத்திட்டம்
தரம் 8

★ புதிய கணிதப் பயிற்சி செயல்நூல்
(ஆக்க ஆலோசனை M.சிவராசா)

★ தமிழ்மொழியும் இலக்கியமும்
(ஆக்க ஆலோசனை திருமதி மனோ ஜெயராசா)

வெளியீடு:
**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
235, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 9481
(சி-48126)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச்2

ஊரெழு, மடத்து வாசல் சுந்தரபுரி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் 11 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும் நடைபெற்று,12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (203-72-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்2

உசன், மிருசுவில் கந்தசாமி ஆலய 108 கலச அபிசேஷ் ஸ்கந்த ஹோமப் பெருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (203)

## தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பம்

வலி.வடக்கு.மார்ச் 2

சுகாதார பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சினால் தாதிய மாணவர்களை பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 2004ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 3 விஞ்ஞான பாடங்களில் சித்திபெற்று இருப்பதுடன், ஜி.சீ.ஈ.(சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழுடன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும்.

18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாத உயரமுடையவராகவும் இருக்கும் திருமணமாகாத ஆண், பெண் இருபாலாரும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் "பணிப்பாளர், (நிர்வாகம்) சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசனை அமைச்சு, சிவசிரிபாய, 385, வணபத்தேகம, விமலவங்ஷ தேரர் மாவத்தை, கொழும்பு-10" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (த-86)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீள ஏற்பது பற்றி பரிசீலிக்கப் பணிப்பு

## மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் வழங்கப்பட்டது

கொழும்பு, மார்ச்.2

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும் ஏற்றுக் கொள்வது குறித்து தேர்தல் ஆணையாளருடன் பரிசீலித்து திட்டம் ஒன்றை வகுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின் போதே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்குமாறு கோரியும் அதுவரை தேர்தலை இடைநிறுத்துமாறு கோரியும் பல மாவட்டங்களின் பல தொகுதிகளிலும் இருந்து நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதனைச் சுட்டிக்காட்டிய நீதியரசர் ஸ்ரீபவன், இவ்வாறு அனைவரும் தேர்தலை நடத்தத் தடையுத்தரவு பெற்றார்களானால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலையே நடத்த முடியாத நிலை தோன்றும் என்றும் சுட்டிக் காட்டினார்.

எனவே, இந்த விடயத்தில் தேர்தல் ஆணையாளருடன் பேசி ஓர் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முயற்சிக்குமாறும் அவர் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டார்.

வாக்களிக்கும் உரிமை ஒவ்வொரு மக்களுக்கும் உள்ளது. தாம் விரும்பிய கட்சிக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அந்த உரிமையைப் பறிக்க முடியாது. எனவே சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்து இந்த விடயத்தில் ஒரு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவித்தார் நீதியரசர். (க-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 26 - 01 - 1923 |  | 11 - 03 - 2005 |

**திருமதி கோவிந்தபிள்ளை யோகம்மா**

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்காது.

சங்கத்தானை லேன், சாவகச்சேரி. (47366)(21.34.45)
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### தேவசகாயம் நீக்கிலஸ்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் நீக்கிலஸ் (ஓய்வு பெற்ற, யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூட ஊழியர்) அவர்கள் நேற்று (01.03.2006) புதன் கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யூலியற் தமயந்தியின் அன்புக் கணவரும் கலிஸ்ரா பிறேமாவின் (ஜேர்மனி) பாசமிகு தந்தையும் யேசுதாசனின் (ஜேர்மனி) மாமனும் எமிலி, யூலி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா (கட்டட ஒப்பந்தகாரர்), மரியாம்பிள்ளை (முன்னாள் ஊழியர், புனித வளனார் கத்தோலிக்க அச்சகம் ), திருமதி அருளம்மா, அந்தோனிப்பிள்ளை (சுங்கலாகா பரிசோதகர்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 51 1/1, பழைய பூங்கா வீதியில் இருந்து புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனோகரி** (மருமகள்).
51 1/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (47368)(21.34.45)

### பொன்னையா சோமசுந்தரம்

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் வவுனியாவில் வசித்தவருமாகிய பொன்னையா சோமசுந்தரம் அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2006) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**17, சித்தூர் வீதி, குடியிருப்பு, வவுனியா.** (47370) (21.34.45)
**வெ.சுப்பிரமணியம்** (இளைப்பாறிய ஆசிரியர்),
**செ.கேதீஸ்வரன்** (மருகன்).

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## பெற்றோர் சந்திப்பு

2006 ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு எமது பாடசாலையின் ஊடாக தோற்றவிருக்கும் மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள், பாதுகாவலர்களுக்கான கலந்துரையாடல் 07.03.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெறும். தவறாது சமுகந்தரவும்.

வி.மாணிக்கம்.
அதிபர்.

(சி-48128)(30)

## கண்ணீர்க் காணிக்கை



மானிப்பாய் புதிய இளைஞர் நட்சத்திர கழக உறுப்பினர் நண்பன் **செல்வன் பா.செந்தூரனின்** அன்புத்தந்தை

**வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினர் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரருக்கு கண்ணீர் காணிக்கை செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புக்கைதின்னி பிள்ளையார் கோயிலடி,
4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (47377)(30)

கழக நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சுப்பிரமணியம்

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நா.சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (01.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சத்தியபாமா (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம் திருகோணமலை), சத்தியசீலன் (பிரான்ஸ்), நித்தியபாமா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுஜாத்தா (லண்டன்), தர்மசீலன் (செலான் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராஜா (கலாசார உத்தியோகத்தர், திருகோணமலை), சந்திரகலா (கொழும்பு), கோபிநாத் (பிரதேச செயலகம், நல்லூர்),செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, நடராசா, சீவரெத்தினம், புவனேஸ்வரி, கற்பகம், சரஸ்வதி மற்றும் மனோன்மணி, முத்துலிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கனகம்மா (சோதி), மதியாபரணம், தருமலிங்கம், இராசரத்தினம் மற்றும் நீலாம்பிகை, கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஆரணன் மற்றும் குருசாரங்கன், ஸ்ரீநிஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.கோபிநாத் (மருகர்),
சேச்லேன், குளப்பிட்டி, கொக்குவில்.
T.P.: 0776105125 (47382)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

### இராமலிங்கம் நடேசன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



பனிப்புலம், பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் நடேசன் சென்னையில் 28.02.2006 அன்று காலமானார்.

அன்னார் திருமதி சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும் இரவீந்திரன் (விரிவுரையாளர் தேசிய கல்வியற் கல்லூரி -வவுனியா), இரமணீந்திரன் (கனடா), இந்திரகுமாரி (கனடா), மல்லிகா (அமரர்), நிர்மலா (கனடா), புவீந்திரன் (கனடா) ஆகியோரின் தந்தையும் அழகரத்தினம் (ஓய்வுபெற்ற சுங்க பிரதிப் பணிப்பாளர்) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னை அடையாறில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (03.03.2006) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

N.Raveendran,
AIRAZAFERN HILL,
31st 4th Main Road,
Kasthuribai Nagar,
Adaiyar, Chennai.
T.P.: 00914424453937. (47376)(30)

தகவல்:
திருமதி பகவதியம்மா
இரத்தினதுரை
(பெறாமகள் - பனிப்புலம்)

### திருமதி தியாகராசா விமலரத்தினம்



இணுவில் மேற்கு, செட்டிவளவு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் தியாகராசா (நுண் ஆய்வாளர் மலேரியா தடை இயக்கம், தெல்லிப்பழை) அவர்களின் அன்பு மனைவி திருமதி தியாகராசா விமலரத்தினம் அவர்கள் 27.02.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சுமதி (சுவிஸ்), துளசி (ஆசிரியை, ஊற்றுப்புலம் அ.த.க.பா, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயும் செல்வரத்தினம், கமலநாதனின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் அன்னரத்தினம், சபாரத்தினம், காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம், நிர்மலாதேவி, சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபாலசிங்கம், சின்னத்துரை, இராசரத்தினம், மகாலட்சுமி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தியடைப்பு பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு. (47371)(30)

தகவல்:
சொ.தியாகராசா
(கணவர்).

## வர்த்தக வங்கியின் சனிக்கிழமை சேவை

யாழ்ப்பாணம், மார்ச்2

வர்த்தக வங்கியின் யாழ். கிளையின் வங்கிச் சேவை நிலையங்களில் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் பிரதி சனிக்கிழமைகளில் வங்கிச் சேவை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சேவை காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெறும் என்றும் -

இந்தச் சேவை வெள்ளவத்தை, புறக்கோட்டை பிரதான வீதி உட்பட எட்டுக்கிளைகளில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (3)

## பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச்2

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய லியோக் கழகத்தை பதவியில் அமர்த்தும் வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் லியோ மாவட்டத் தலைவர் ஏ.சுஜீதரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (3)

## சகடை வெள்ளோட்டம்

தென்மராட்சி,மார்ச் 2

சரசாலை தெற்கு, மகிழ்கின்றவளவு கிராமாவில் பிள்ளையார் ஆலயத்திற்கென உருவாக்கப்பட்ட சகடை வெள்ளோட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அப்பகுதி மக்களின் நிதி உதவியுடன் சகடை உருவாக்கப்பட்டுள்ளது.

சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் வெள்ளோட்ட விழாவில் சகடையை உருவாக்கிய ச.சிவகுணேசன் கௌரவிக்கப்படவுள்ளார். (3-117)

## ஜெனீவா...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*-இப்படி 'விளாசிய' பாலா, ''தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் அது தொடர்பான சமாதான முயற்சிகள் பற்றிய வரலாற்றையும் பொலீஸ்மா அதிபர் மட்டுமின்றி அரசுப் பேச்சுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் அறிய வேண்டுமானால் நான் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலையும் எனது மனைவி அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலையும் வாசித்தறிய வேண்டும். அதற்காக இந்த இரு நூல்களினதும் ஆங்கிலப் பிரதிகளை நான் உங்கள் அனைவருக்கும் வழங்கும்படி எனது பிரதிநிதிகளுக்குக் கூறியிருக்கிறேன். அவர்கள் வழங்குவார்கள்'' - என்று கூறிமுடித்தார்.*

*பாலாவின் கனகச்சித பதிலால் அதிர்ந்து, உறைந்து, அடங்கிப் போயிருந்த பொலீஸ்மா அதிபரும், ஏனைய அரச பிரதிநிதிகளும் அந்த இரு நூல்களையும் பவ்வியமாகப் பெற்றுக்கொண்டதோடு, அவற்றில் எழுதியவர்களினது ஒப்பங்களை (பாலாவினதும் துணைவியாரினதும்) பெற்றுக் கொண்டனர்.*

*அந்தப் புத்தகங்களை மேலோட்டமாகப் புரட்டிப் பார்த்த போதுதான் அரசுப் பிரதிநிதிகளுக்குத் தாம் இழைத்த தவறு புரிந்தது.*

*அது என்ன தவறு?*

*அதன் விவரத்தையும், பேச்சு மேசையிலும், மேசைக்கு வெளியிலும் இடம்பெற்ற மேலும் பல சுவாரஸ்ஸமான தகவல்களையும் நாளைய இதழில் பார்ப்போமா?*

*(வளரும்)*

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், லைலா
நடித்த
பரமசிவன்
பு.நே. 11.00, 3.00, 7.00

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ், சிபிராஜ், நமீதா நடித்த
கோவை பிரதர்ஸ்
பு.நே. 10.30, 1.30,4.30 , 7.30

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேநாள் வெளியீடு
அக்ஷன் கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக் நடித்த
மதராஸி
பு.நே.: 10.00, 1.00, 4.00

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் சின்னத்துரை (முத்துலிங்கம்)

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 104/1, முரசுமோட்டையை நிரந்தர முகவரியாகவும், காளிகோயிலடி, உடையார் கட்டு தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சின்னத்துரை (முத்துலிங்கம்) அவர்கள் 28.02.2006 அன்று அகால மரணமானார்.

அன்னார் அமரர் அருணாசலம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான செல்வராசா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவீந்திரராசா (கனடா), ரஜனிதேவி (கனடா), யோகேந்திரராசா, கோகுலராசா, ஜெயராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரன் (கனடா), பிறேமலதா (கனடா), சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பவீன் (கனடா) அவர்களின் அன்புப் பேரனும் அன்னலெட்சுமி (கனடா), நாகராசா (கனடா), பொன்னுத்துரை (சுவிஸ்), குணபாலன் (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தையா (கனடா), காலஞ்சென்ற நவரெட்ணம், பராசக்தி (கொழும்பு) காலஞ்சென்ற நித்தியலெட்சுமி, இராசாத்தி (முரசுமோட்டை), பாலசுப்பிரமணியம் (முரசுமோட்டை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2006) அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உடையார்கட்டு வட்க்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
உடையார்கட்டு தெற்கு. (சி-48129)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னையா நாகலிங்கம்

(முன்னாள் பணியாளர் - யாழ் போதனா வைத்தியசாலை)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகலிங்கம் அவர்கள் 28.02.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் புஸ்பராணி (ஜேர்மனி), லைலாராணி (லண்டன்), சுகுமார் (ஆசிரியர் நல்லூர் ஞானோதயா வித்தியாலையம்), பிறேமராணி (தே.வீ.அ.அ.சபை, திருகோணமலை), ரகுமார் (பொ.சு.ப. யாழ். மாநகரசபை), சுரேஸ்குமார் ( கனடா), பத்மராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயரெட்ணம் (ஜேர்மனி), செல்வரெட்ணம் (லண்டன்), பேபிசுலோசனா (வலி.கிழக்குப் பிரதேச சபை, கோப்பாய்), இராஜரெட்ணம் (ஆசிரியர் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, திருகோணமலை), கலைவாணி, கலாவதி (கனடா), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சித்தேஸ், சங்கீதா, மயூரன், துர்க்கா, கௌதமி, சௌமியா, ஆர்த்திகா, ஆதவி, ஜெலக்ஷி, கஜந்தன், கஜானன், கிறிஸ்த்தோபர், பிரவீன், தர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யமுனா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாளை (03.03.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 43/1, யமுனா வீதி,
நல்லூர். (47378)(30)

தகவல்:
பிள்ளைகள்.

### முத்தையா இராசரத்தினம் (பத்தர்)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது 43,A சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (01.03.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன், சூ.ஜெயமலர், சிவன்மலைச்சந்திரன் (ஜப்பான்), திருச்சந்திரன் (அஞ்சல் அலுவலகம், தெல்லிப்பழை), செல்வச்சந்திரன், செ.ரஞ்சிதமலர் (ஜேர்மனி), கு.சாந்திமலர், ஜெயச்சந்திரன், கிருபாமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.இன்பசோதி, கா.சூரியகுமார் (பிரதேச செயலகம், நல்லூர்), சி.மின்சயோ (ஜப்பான்), தி.மாலதி, செ.ஆனந்தி, அ.செல்வராசா (ஜேர்மனி), வி.குலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் செ.பிரணவன் (ஜேர்மனி), செ.சந்தோஜினி, செ.நிலாசினி, கு.பிரவீன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.03.2006) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43 A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (47374) (16)

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னப்பு வேலுப்பிள்ளை



(ரெயில்வே எஞ்சின் சாரதி)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (01.03.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, தாவடி வீதி,
மானிப்பாய். (47375)(30)

தகவல்:
குடும்பத்தினர்.

# பல்கலைச் சூழலில் படையினர் பிரசன்னம் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிப்பதில் தாமதம்

## துணைவேந்தருடனான சந்திப்பை அடுத்து மாணவர் தரப்பு கருத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 2

யாழ். பல்கலைக்கழகச் சூழலில் படையினர் தொடர்ந்து நிலைகொண்டுள்ளதால், கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தாமதமாகின்றது என மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஆராய்வதற்காகப் பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகளுக்கும் துணை வேந்தருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இச்சந்திப்பை அடுத்தே மாணவர் தரப்பில் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தின் பிரசன்னம் தொடர்ந்து இருப்பதால், மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தனர்.

மாணவர்களுக்குப் பாதுகாப்பு உத்தர வாதம் வழங்கப்படும் பட்சத்திலேயே மீளவும் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்கலாம் என்று மாணவர் அறிவித்திருந்தனர். ஜெனீவாப் பேச்சின் பின் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்து ஆராய மாணவர் பிரதி நிதிகளும் துணைவேந்தரும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து மாணவர் தரப்பு அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கின்றது.

(3-14)

## ஜெனீவாப் பேச்சுக்குப் பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு இளம்பரிதி கொண்டு வந்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

✱ ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் கூட ஸ்ரீலங்காப் படைத்தரப்பினது மக்கள் மீதான நெருக்குவாரங்கள் தணிவதாகத் தெரியவில்லை.

✱ போர் நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுவதாக எட்டப்பட்ட இணக்கப்பாட்டினை புறந்தள்ளி ஈ.பி.டி.பி. உறுப்பினர்களாகிய ராசிக், ஆலாலசுந்தரம், சதீஸ் ஆகியோர் நெடுந்தீவில் ஆயுதங்களுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடமாடுகிறார்கள்.

✱ தீவகத்தில் உள்ள கடற்படையின் முகாம்களையும் காவலரண்களையும் பலப்படுத்தும் நோக்குடன் மண் அணைகளுக்காக நிலம் தோண்டப்படுவதால் கடல் நீர் நிலப்பகுதிக்கு உட்புகும் நிலை தோன்றியுள்ளது. இதனால், பல்வேறுபட்ட சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

✱ மடத்துவெளி, குறிகாட்டுவான் துறை முகப்பகுதிகளில் பயணிகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

✱ இளவாலை குசுமன்துறையில் புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு இருந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்கள் நேற்று வெளியேற்றப்பட்டு இடம்பெயர்ந்து சீனிப்பந்தல் என்னும் இடத்தில் தங்கியுள்ளன.

✱ நாவற்குழிப் பாலம் அருகில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு மேலதிகப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

✱ வீதியால் ரோந்து வரும் படையினர், மக்கள் குடியிருப்புக்கள் ஊடாகவும் நடவடிக்கை களை மேற்கொள்ளுகின்றனர்.

✱ இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் சிறுவயது மாணவர்கள் பாடசாலை முடிந்து வீடுதிரும்பும்போது, நான்கு மாணவர்களை வீதியோரப் பற்றைகளை வெட்டும்படி இராணுவத்தினர் மிரட்டியுள்ளனர். வெட்டமறுத்ததன் பேரில் 13 வயது மாணவனாகிய ஜேம்ஸ் நிரோஜன் என்பவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கடும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

✱ தொடரும் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் மக்களது இயல்பு வாழ்கையைப் பாதித்து மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

✱ வடமராட்சி வடக்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் புதிதாக அமுல் செய்யப்பட்ட கடற்றொழிலுக்கான தடைகளும் இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரிப்பதையே வெளிப்படுத்துவதாக உள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. (3)

## நான்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும். இதற்காக என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன். நான் எடுக்கும் இந்த முயற்சிக்கு நாட்டு மக்களது பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவேண்டியது அவசியமானது. இன்றைய நிலையில் நான் நடத்திய அனைத்துக்கட்சி மாநாட்டில் கட்சிகள் அனைத்தும் அமைதி முயற்சி குறித்து கருத்தொருமிப்புக்கு வந்துள்ளமை எமக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

உள்ளூராட்சி மன்றங்களை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலமே இத்தகைய எமது இலக்குகளின் வெற்றிகளை தொடர் நிலைப்படுத்தலாம். எனவே, இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி எல்லா மாவட்டங்களிலும் ஆட்சியைப் பிடிக்க நீங்கள் தூய்மையோடும், சட்டதிட்ட விதிகளுக்கு ஏற்பவும் செயற்பட்டு வென்றெடுக்க வேண்டும் என்றார். (க-3)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன என்பதை நிரூபிப்பதற்கு எவ்வித மான ஆதாரங்களும் இல்லை என இந்த இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்.

"இவ்வாறான குழுக்கள் செயற்படுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இராணுவம் இவ்விடயத்தில் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும்." என ஹொக்லண்ட் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஐந்து ஆயுதக் குழுக்கள் செயற்படுவதாக ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் தெரிவித்ததையடுத்து, அரசாங்கப் படைகள் தவிர்ந்த எந்தவொரு குழுவும் ஆயுதங்களுடன் செல்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்ற உறுதி மொழியை அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருந்தது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில் தமது ஆயுதங்களைக் களைய முடியாது என கருணா தெரிவித்ததாகக் கூறப்படுவது தொடர்பாகவும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் ஹொக்லண்ட் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"இராணுவம் மறுதலிப்பான கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில் ஆயுதம் தாங்கிய கருணா குழு செயற்படுகின்றது என்பதை மேலும் உறுதிப்படுத்துவதாகவே கருணாவின் இந்தக் கருத்து அமைந்திருக்கின்றது" என அவர் தெரிவித்திருக்கின் றார்.

ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவுள்ள கண்காணிப்புக் குழு அது தொடர்பான அறிக்கை ஒன்றை ஜெனீவாவில் ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது சமர்ப்பிக் கும் எனவும் தெரிவித்தார். (3)

## சர்வகட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாநாட்டில் ஜெனீவாப் பேச்சுகளின் பெறுபேறு தொடர்பில் முக்கியமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக ஜெனீவா பேச்சுகளின் போக்குக் குறித்து ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமய்வும் தமது நிலைப்பாடுகளை இம் மாநாட்டில் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தவுள்ளன என அக் கட்சிகளின் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (க-3)

## அரசுத் தரப்பின் நிலைப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலான அரச நிர்வாகத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்துவதாயிருக்கிறது. உறுப்பினர்கள் சிலரின் உண்மைக்குப் புறம்பான கூற்றுக்களை வன்மையாக ஆட்சேபிக்கிறோம்.

- என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

"ஜெனீவாப் பேச்சை ஒட்டி வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலுள்ள விடயங்களை திரிபுபடுத்தி தவறான விளக்கம் தருவதற்கு எடுக்கப்படும் இந்த முயற்சியானது எம் இரு சாரார் மத்தியிலுமுள்ள பரஸ்பர நம்பிக்கையை சிதைப்பதாக உள்ளது. அத்தோடு சமாதான முன்னெடுப்புகளை கொச்சைப்படுத்துவதுமாகவுமே உள்ளது. - என்றார் பாலசிங்கம்.

அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறுவதாவது:-

யுத்தநிறுத்த உடன்படிக்கை ஜெனீவாவில் வைத்துத் திருத்தப்பட்டது என்ற ஒரு கட்டுக் கதையை, இலங்கை அரசாங்கக் குழுவுடன் வந்து பேச்சுகளில் பங்குபற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா புதன்கிழமை வெளியான 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு கொடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். இது குறித்து நாம் கவலைப்படுகிறோம். இவர் முன்வைத்திருக்கும் வாதங்கள் அர்த்த புஷ்டியானவையாக இருக்காது. சிரிப்புக்கிடமானவையாகவே உள்ளது.

பேச்சுகளின்போது பேசப்பட்ட விவகாரங்களும், அந்த விவகாரங்கள் தொடர்பாக இரு தரப்பாரும் தந்திருக்கும் உறுதிமொழிகளும், கூட்டறிக்கையில் தரப்பட்டிக்கின்றன. ஆனால், இந்த விடயங்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இடம்பெறாதவையாகும். எனவே, புதிதாக இடம்பெற்ற இந்த விடயங்களைத் திருத்தமாகவே கொள்ளவேண்டும் என்று சட்டத்தரணி ஒரு வாதத்தை முன்வைத்திருக்கிறார். அவரது இந்த வாதம் ஏற்புடையதாகாது என்பது மட்டுமல்ல, இரு தரப்பாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிமொழிகளை மீறுவதாகவும் இருக்கிறது. யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள பிரதான விவகாரங்கள் குறித்துத்தான் முதலில் பேசுவதென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேசிய விடயங்களும் இந்தக் கட்டுக்கோப்புக்குள்ளேயே இருந்தன.

பேசப்பட்ட விடயங்கள் யுத்தநிறுத்த உடன் படிக்கையின் மூலப் பிரதிக்கு உள்ளடங்காத பிற விடயங்களாக இருந்தாலும் கூட அவற்றை அங்கு முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது.

உதாரணத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் ஆறு சுற்றுப் பேச்சுகள் நடந் தன. ஆறு கூட்டறிக்கைகளும் வெளியிடப்பட்டன. இந்தப் பேச்சின் போது தீர்மானங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவை நிறைவேற்றி வைக்கப்படும் என்ற இருதரப்பாலும் உறுதி மொழிகளும் தரப்பட்டன. இந்தத் தீர்மானங்களில் பல யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிராத விடயங்களாகவும் இருந்திருக்கின்றன. ஆனால், அவை யுத்தநிறுத்தத்தோடு சம்பந்தப்பட்ட சமகால விடயங்களாகவே இருந்திருக்கின்றன. இதை வைத்துக் கொண்டு பேச்சில் பேசப்பட்ட விடயங்கள், அவற்றின் மீது இரு தரப்பாலும் தரப்பட்ட வாக்குறுதிகள் எல்லாவற்றையும் உடன்படிக்கையில் செய்யப்பட்ட திருத்தங்களாக கொள்ள முடியுமா? அதேபோலவே இங்கு மூலபிரதான விவகாரங்களோடு தொடர்புடைய விடயங்கள் பேசப்பட்டிருந்தாலும் அவற்றை உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களாக ஏற்றுக்கொள்ள முடியுமா?

யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள சரத்துகளை திருத்துவது என்பது இலேசுப்பட்ட விடயமல்ல. மிகவும் கடுமையான, சிரமமான காரியமாகும். திருத்தங்கள் ஏதாவது கொண்டு வரப்பட வேண்டும் என்றால் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட ஆள்கள் இரு தரப்பினரதும் சம்மதம் முதலில்பெறவேண்டும். அத்தோடு அனுசரணையாளரின் சம்மதமும் பெறப்பட வேண்டும். அத்தோடு விடயம் முடிந்து விடாது. திருத்தத்திற்கான அங்கீகாரத்தை கையொப்ப ஒப்புதல்மூலம் இலங்கை ஜனாதிபதி, விடுதலைப் புலிகளின் தலைவர், அனுசரணையாளரான நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் அங்கீகாரமும் பெறப்பட வேண்டும்.

ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியான எச்.எல்.டி. சில்வா அவர்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை, அதன் தாற்பரியங்களை எல்லாம் சீர்தூக்கிப் பாராது மேலெழுந்தவாரியாகக் கருதி அதில் திருத்தங்கள் செய்யப்பட்டன என்று குறிப்பிட்டு அறிக்கை விட்டிருப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருவதாகவே இருக்கிறது. - என்றார். (க-3)

## தமிழர் விடுதலைக் கூட்டணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட துணைத் தலைவராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் எதிர்மனுதாரார்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நீதிமன்றின் மறுஉத்தரவு வரை வீ.ஆனந்தசங்கரியின் கலந்தாலோசனையின்றி கட்சியின் எந்தக் கூட்டத்தையும் நடத்தக்கூடாது என நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு நேற்றுக்காலை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர் தரப்பில் வழக்கை ஒத்திவைக்கக் கோரப்பட்டது. ஆனால், எதிர் மனுதாரர்கள் வழக்கு விசாரணைக்கு இந்தத்தினம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதால் வழக்கு விசாரணை நடைபெறாக வேண்டும் என வற்புறுத்தினர்.

அதையடுத்து வழக்கு விசாரணை பிற்பகலில் நடைபெறும் என நேற்றுக் காலை நீதிபதி அறிவித்தார்.

அத்தகவல் வீ.ஆனந்தசங்கரிக்கு அறிவிக்கப்பட்ட தையடுத்து அவர் விழுந்தடித்துக் கொண்டு நீதிமன்றம் வந்து சேர்ந்தார். பிற்பகல் விசாரணை ஆரம்பமானது.

முதலில் மனுதாரரான ஆனந்தசங்கரியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டது.

அவரை, எதிர்மனுதாரர் தரப்புச் சட்டத்தரணியான சுமந்திரன் குறுக்கு விசாரணை செய்தார். அச்சமயமே 'சுடர் ஒளி' பத்திரிகை புலி களின் மூலதனத்தில் இயங்குவது எனத் தாம் குற்றம் சுமத்தினார் என்று ஆனந்தசங்கரி கூறினார். அவரிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் அமைப்பு விதிகள் (யாப்பு) வாசித்துக் காட்டப்பட்டன.

கட்சியின் 'அடிப்படைக் கொள்கைகள்' என்ற தலைப்பில் அமைந்த 3:1 மற்றும் 3:2 விதிகள் வாசித்துக் காட்டப்பட்டன.

*"எந்த ஒரு பிரதேசமோ, மதமோ ஏனைய பகுதிகள் அல்லது மதங்கள் மீது ஆதிக்கம் செலுத்தாத வகையில் மதசார்பற்ற, சோசலிஸ இணைப்பாட்சி அடிப்படையில் தமிழ் ஈழம் அமையும்"* - என்ற அடிப்படைக் கொள்கையும் -

*"தமிழீழத்தின் அங்கமான முஸ்லிம் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஒரு சுயாட்சி மாகாணம் அவர்கள் பெரும்பாலும் வாழும் பிரதேசத்தில் அமைக்கப்படும்".*

- என்ற. அடிப்படைக் கொள்கையும் -

வாசித்துக்காட்டப்பட்ட போது அவை இன்று ஏற்றுக்கொள்ளப்பட முடியாத்வை என்றார் அவர்.

எனினும் -

*"இலங்கையைத் தாயமாகக் கொண்ட தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் தமிழ் ஈழத்திலோ ஸ்ரீலங்காவிலோ பூரண குடியுரிமையை நிலைநாட்டுதல்"* - என்ற மூன்றாவது அடிப்படைக் கொள்கை வாசித்துக் காட்டப்பட்டபோது குடியுரிமை வழங்கப்பட்டு விட்டதாக அவர் கூறினார்.

கட்சியின் அமைப்பு விதிகள் தொடர்பான முன்னுரையின் ஒரு பகுதியையும் (தமிழீழம் பற்றிய வாசகங்களையும்) அவர் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றார்.

இக்கட்டத்தில் பிற்பகல் 3 மணியளவில் குறுக்கு விசாரணை இடைநிறுத்தப்பட்டது. வழக்கு ஜுன் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். எல். குணசேகரவும், எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரனும் ஆஜராகினர். (க-3)

புலமைப்பரிசில் பரீட்சை
திரு.கணேசலிங்கம் அவர்களின்
2006 தரம்:5 மாணவர்களுக்கான விசேட
3வது பரீட்சை வினாத்தாள் விற்பனைக்கு
தரம் 4முதல் O/L வரை முதலாவது வினாத்தாள்
யாழ் நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை
நல்லூர் நகிமிலனி புத்தகசாலை (கோயில் முன்பாக)

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
MR.T.THANENDRAN
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டது.
வியா.,வெள்.,சனி,ஞாயிறு
3.30,4.30,5.30

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் தங்கம்மா

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற க.சி.மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவி திருமதி மயில்வாகனம் தங்கம்மா அவர்கள் நேற்று (01.03.2006) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2006) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சிவம்
(மகன் - சிவசயானி நகையகம் - கஸ்தூரியார் வீதி).

66/14, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம். (47384)(30-16-49)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.





## உயிரியல் II

திருT. தம்பிராஜா, திரு.v.s குணசீலன், திரு.த.கெங்காதரன்

கடந்த 23.02.2006ஆம் திகதிய கல்விச்சுடரின் உயிரியல் II இன் வினாத்தாளின் தொடர்ச்சி இன்று பிரசுரமாகின்றன.

C. பாடசாலை ஆய்வு கூடங்களில் நுண்ணங்கிகளை கிருமிபுகுத்துவதற்கென (Inoculation) பொதுவாக பயன்படுத்துகின்ற நான்கு உபகரணங்களைக் கீழுள்ள படங்கள் A, B, C, D எடுத்துக் காட்டுகின்றன.




i.. மேற்படி நான்கு உபகரணங்களையும் இனங்காண்பதுடன் அவை பயன்படுத்தப்படும் பிரதான நோக்கத்தினையும் குறிப்பிடுக.

| உபகரணம் | பயன்படுத்தப்படும் நோக்கம் |
|---|---|
| A ................................ | ................................ |
| | ................................ |
| B ................................ | ................................ |
| | ................................ |
| C ................................ | ................................ |
| | ................................ |
| D ................................ | ................................ |
| | ................................ |

ii. A, B ஆகியன எங்கனம் கிருமியழிக்கப்படுகின்றது என்பதைச் சுருக்கமாக வ்பரிக்க?
A ................................................................
B ................................................................

iii. பால் நற்காப்புச் செய்யப்பவதற்காக பொதுவாக பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிலும் நுண்ணங்கித் தொழிற்பாடு எங்ஙனம் கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதையும் சுருக்கமாகத் தருக.


| நற்காப்பு முறை | நுண்ணங்கி கட்டுப்படுத்தப்படும் முறை |
|---|---|
| 1. ................................ | ................................ |
| | ................................ |
| 2. ................................ | ................................ |
| | ................................ |
| 3. ................................ | ................................ |
| | ................................ |
| 4. ................................ | ................................ |
| | ................................ |

iv. பழுதடைந்த உணவை உட்கொள்ளும் ஒருவருக்கு ஏற்படக்கூடிய இரு நோய்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்களின் பெயரையும் பிறப்பிக்கப்படும் புறநஞ்சு வகைகளையும் குறிப்பிடுக.
1. பொட்டுலிசம் (Botulism) ................................
2. வாந்திபேதி (Cholera) ................................

D. i. மருந்துவத்துறையில் மீளச்சேர்தல் தொழினுட்பத்தின் பிரயோகங்களைக் குறிப்பிடுக.
................................................................

ii. மீளச்சேர்தல் DNA தொழினுட்பத்தின் போது இடம்பெறுகின்ற பிரதான படிமுறைகளை கீழுள்ள வரிப்படம் கருதுகோளுக்குரிய முறையில் எடுத்துக்காட்டுகின்றது?

a. இங்கே பிளாஸ்மிட்டுக்கள் (Plasmids) எனக் குறிப்பிடப்பட்டவை பற்றி நீர் யாது விளங்குகின்றீர்? ................................




b. கலம் ஒன்றிலிருந்து DNA யினைத் தனியாக்குவதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் இரண்டினைத் தருக.
1. ................................................................

c. இச்செயல்முறையில் சம்மந்தப்பட்ட நொதியம் X, Y என்பவற்றைக் குறிப்பிடவும்
X................................Y................................

d. மீளச்சேர்க்கையடைந்த பிளாஸ்மிட்டை விருந்துவழங்கி பற்றீரியாக்கலமொன்றினுள் புகுத்தும் நிகழ்ச்சியானது எவ்வாறு அழைக்கப்படுகிறது.
................................................................

4. A. i.உயிரினக்கூட்டம் ( Biome) என்பது யாது?
................................................................

ii. கீழ்க்காணும் உயிரனகூட்டங்கள் ஒவ்வொன்றும் காண்பிக்கும் இரு பிரதான சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

a. அயனமண்டல இலையுதிர் காடுகள்
1. ................................................................
2. ................................................................

b. சவனா
1. ................................................................
2. ................................................................

c. அயன மண்டல பாலை நிலம்
1. ................................................................
2. ................................................................

d. தைகா (Taiga)
1. ................................................................
2. ................................................................

iii. உயிர்ப் புவி இரசாயனச் சக்கரம் (Biogeochemical Cycle) என்றால் என்ன?
................................................................

iv. உயிர் புவி இரசாயனச் சக்கரத்தில் பங்கேற்கும் மூன்று பிரதான உயிரினவியற் கூறுகளின் பெயர்களை எழுதுக.
1. ................................................................

iii. நீரியல் சக்கரம் (Hydrological Cycle) உயிரப் புவி இரசாயனச் சக்கரத்திலிருந்து காண்பிக்கும் பிரதான வேறுபாடு யாது?
................................................................

iv. மேற்கூறிய சக்கரம் எதனால் ஆளப்படுகிறது..
................................................................

B. i. உயிரின மண்டலத்தில நிகழும் நைதரசன் சக்கரம் பற்றிய கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

i. நைதரசன் நாட்டல் என்றால் என்ன?
................................................................

ii. உயிர்முறை நைதரசன் நாட்டலில் பங்கேற்கும் நுண்ணுயிர்கள் இரு வகையான வாழ்க்கை முறையை மேற்கொள்கின்றன. இவ்வாழ்க்கை முறையைப் பெயரிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் தருக.

| வாழ்க்கை முறை | உதாரணம் |
|---|---|
| 1. ................................ | ................................ |
| 2. ................................ | ................................ |

iii. நைத்திரேற்றாக்கம் என்றால் என்னவென்பதைக் குறிப்பிட்டு அதில் பங்குகொள்ளும் நுண்ணங்கிகளையும் குறிப்பிடவும்?
நைத்திரேற்றாக்கம் ................................................................
................................................................
நுண்ணங்கிகள் ................................................................

iv. நைத்திரேற்றுத் தாழ்த்தல் என்றால் என்ன?
................................................................

v. அமோனியாவாக்கம் என்றால் என்னவென்பதைக் குறிப்பிட்டு அது எவ்வகையான உயிரினவியற் கூறினால் மேற்கொள்ளப்படுகிறது எனக் கூறுக.
அமோனியாவாக்கம் ................................................................
................................................................
உயிரி................................................................

vi. நைதரசன் சக்கரத்தில் மனிதனின் தலையீட்டினால் ஏற்படும் இரு பாதிப்புக்களைக் குறிப்பிடுக.
1. ................................................................

C. i. மனிதனின் நுரையீரலினூடு ஊடுருவி வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்யும் இரு ஒட்டுண்ணிகளைக் குறிப்பிடவும்?
1................................ 2. ................................

ii. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஒட்டுண்ணியும் மனிதனுக்கு ஏற்படுத்தும் ஒவ்வொரு பிரதான பாதிப்பைக் குறிப்பிடவும்,
1. ................................................................

iii. மனிதனின் உணவுக்கால்வாயை வாழிடமாகக் கொண்டிராத பல்கல ஒட்டுண்ணி யாது?
................................................................

iv. மேற்குறிப்பிட்ட ஒட்டுண்ணி மனித உடலில் எவ் அங்கத்தில் / அங்கங்களில் வாழ்கிறது?
................................................................

v. B (iv) இல் குறிப்பிட்ட ஒட்டுண்ணியினது தொற்றும் பருவத்தையும், அதன் காவியினத்தையும் பெயரிடவும்?
தொற்றும் பருவம் ................................................................
காவி இனம் ..... ................................................................

D. i. மீனின் பல்லின வளர்ப்பு என்பது யாது?
................................................................

ii. மீனின் பல்லின வளர்ப்பின் இரு அனுகூலங்களைக் குறிப்பிடவும்?
1. ................................................................

iii. இலங்கையிலே இந்தியக் கெண்டைகளைப் பண்ணை செய்வதில் எதிர் நோக்கப்படும் முக்கிய பிரச்சினை யாது?
................................................................

iv. இலங்கையிலே போலியொப்ரீரா வருணத்தைச்சாராத தென்னைப்பீடையொன்றைக் குறிப்பிடவும்?
................................................................

v. மேற்குறிப்பிட்டபீடை தென்னைப்பயிருக்கு ஏற்படுத்தும் பிரதான சேதங்களையும் அச் சேதங்களுக்கான அறிகுறிகளையும் குறிப்பிடவும்?
1.சேதம் ................................................................
2.அறிகுறி ................................................................

vi. பின்வரும் முறைகள் ஒவ்வொன்றினாலும் கட்டுப்படுத்தலாம் என நீர் கருதும் பிரதான தென்னைப் பயிர்ப்பீடைகளின் சாதாரண பெயர்களைக் குறிப்பிடவும்?
1. குப்பைகளை எரித்தல்/புதைத்தல் ................................
2.தொகுதிப்பீடை கொல்லிகளைப் பயன்படுத்தல் ................................

## பகுதி ii – B (கட்டுரை)

ஏதாவது நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. விடையளிப்பதற்கு தரப்பட்ட விடைத்தாளைப் பயன்படுத்துக. பொருத்தமான இடங்களில் விளக்கப் படங்களை தெளிவாக வரைந்து விளக்குக.

1. a. மனிதச் செவியின் கட்டமைப்பைச் சுருக்கமதக விவரிக்க.

b. அது கேட்டலின்போது எவ்வாறு தொழிற்படுகின்றதென விளக்குக.

2. a. நெற்பயிரைத் தாக்கும் பூச்சிப் பீடைகளின் பொதுப் பெயரைத்தந்து அவற்றை இனங்காண்பதற்குதவும் புற இயல்களைக் குறிப்பிடவும்.
b. நெற்பயிரில் இப்பீடைகள் ஏற்படுத்தும் சேதங்களையும் அச்சேதங்களுக்கான அறிகுறிகளையும் தருக?
c. இப்பீடைகளைக் கட்டுப்படுத்தக் கையாளப்படும் மரபுவழி முறைகளையும், உயிரியல் முறைகளையும் விபரிக்க?

3. a. தாவரங்களிலே வளர்ச்சி, வியத்தம், என்பன பற்றி நீர் விளங்குவது யாது?
b. ஒரு தாவரத்தின் நாற்றிலிருந்து மூப்பு வரையான நிலைகளில் எடுத்த உலர்நிறையைக் காலத்திற்கு எதிராக வரை படமாகக் குறிக்க. நீர் வரைந்த வளையியின் முக்கியமான அம்சங்களை வர்ணிக்க.
c. ஒரு மூன்று வருட வயதுடைய இருவித்திலைத் தாவரத்தண்டில் துணை இழையங்கள் தோன்றுவதில் சம்பந்தப்பட்ட படிகளைத் தொடரியில் நிரற்படுத்துக.
d. ஆண்டு வளையங்கள் என்றால் என்ன என்பதையும் அவை எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும் விளக்குக.

4. a. இலங்கையிலே நீர் மாசடைதலை ஏற்படுத்தும் பிரதான காரணிகளைக் குறிப்பிடவும்
b. நீர் மாசடைதலினால் மனிதனிலும் விலங்குகளிலும் ஏற்படும் பாதிப்புக்களைக் குறிபபிடவும்.
c. உயிரியலுக்குரிய முறையில் சூழலைத் திருத்தியமைத்தல் (Bio remediation) என்பதால் நீர் விளங்குவது யாது? இம்முறை எநதெந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றது எனபதைக் குறிப்பிடவும்?

5. a. (i) சோதனைக்கலப்பினம் (ii) பின்முகவினக்கலப்பு என்பவற்றினைப்பற்றி நீர் விளங்குவது யாது?
b. தாவர விருத்திசெய்தலில் (i) சோதனைக்கலப்பினம் (ii) பின்முகவினக்கலப்பு ஆகியவற்றின் பயன்பாடு யாது?
c. ஊதாநிறப் பூக்களையும் நீண்ட மகரந்தமணிகளையும் கொண்ட ஒரு Pea தாவரத்தினதும், சிவப்பு நிறப்பூக்களையும் உருண்டைவடிவான மகரந்தமணி களையும் கொண்ட Pea தாவரத்தினதும், இனக்கலப்பு கொடுத்த தாவரங்கள் ($F_1$) எல்லாவற்றிலும் ஊதா நிறப்பூக்களும் நீண்ட மகரந்தமணிகளும் காணப்பட்டன. $F_1$ தாவரங்களுக்கிடையிலான இனக்கலப்பு பின்வரும் தோன்றல்களைக் கொடுத்தது.

| | |
|---|---|
| ஊதா நீண்ட | 4830 |
| ஊதா உருண்டை | 390 |
| சிவப்பு நீண்ட | 393 |
| சிவப்பு உருண்டை | 1330 |

i. இவ்வினக்கலப்பின் பெறுபேறுகளை விளக்குக.
ii. மேற்கூறிய தோற்றவமைப்புகளின் அறிமுறைக்குரிய (theoretical) விகிதம் $F_2$ இல் என்னவென எதிர்பார்ப்பீர்?

6. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான குறிப்புகள் தருக?
a. இயற்கை வளங்கள் b. இழைய வளர்ப்பு c. குழியவன்கூடு

(முற்றும்)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

## உயிரியல் - I

| | | | | |
|---|---|---|---|---|
| 51. 2 | 52.2 | 53.1 | 54.1 | 55.3 |
| 56.3 | 57.5 | 58.1 | 59.4 | 60.2 |

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

## பௌதிகவியல்

R.குமரன் B.Sc யாழ்.


* எல்லா வினாக்களிற்கும் விடை தருக.
* 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்த மானது என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து, குறிக்க
* கணிப்பானைப் பயன்படுத்தலாகாது.

($g = 10Nkg^{-1}$)


01) வில்லைகளின் வலுவின் பரிமாணம் யாது?
(1) $ML^2T^{-1}$ (2) $T^{-1}$ (3) L (4) $L^{-1}$ (5) $ML^2T^{-3}$

02) பிரதான அளவிடை 1mm ஆக உள்ள், பிரதான அளவிடையின் 49mm ஆனது 50 பிரிவுகளாக வகுக்கப்பட்ட வேணியர் அளவிடை கருவியொன்றில் அளக்கப்பட்ட நீளம் 6.048cm ஆயின் அவ்வளவிடைக்கேற்ப பொருந்தும் வேணியர் பிரிவுகளின் எண்ணிக்கை,
(1) 48 (2) 25 (3) 24 (4) 2 (5) 1

03) ஒரு துணிக்கையின் வேகம் நேரத்துடன் மாறுபடுவதை வரைபு காட்டுகிறது. குறித்த இயக்கத்திற்கான துணிக்கையின் சராசரி வேகம் யாது, (வரைபு அடைக்கும் பரப்பு A)
(1) $(V_2-V_1)/2$ (2) $(V_2+V_1)/2$ (3) $A/t_2$
(4) $A/(t_2-t_1)$ (5) $(V_2(t_2-t_1)-A)/(t_2-t_1)$





04) X,Y,Z என்பன M திணிவுடைய சர்வசமனான மூன்று சீரான வளையங்கள் ஆகும். இவற்றின் மையங்கள் A,B,C. இவை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இணைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது m திணிவுடைய சிறிய பொருளொன்று A யிலிருந்து C ற்கு AC வழியே கொண்டு செல்லப்படுகிறது. இதன் போது தொகுதியின் ஆரம்ப இறுதி புவியீர்ப்பு மையங்கள் காணப்படுவதற்கு பொருத்தமான நிலைகள்,
(1)AP க்குஇடையே QC க்கு இடையே
(2)PB க்குஇடையே QC க்கு இடையே
(3)PB க்குஇடையே BQ க்கு இடையே
(4)AP க்குஇடையே BQ க்கு இடையே
(5)எப்போதும் புள்ளி B யில்.





05) A,B ஒரே திரவியத்தாலான சம ஆரையுள்ள இரு கம்பிகளாகும். அவற்றின் நீளங்களின் விகிதம் 3:4 ஆகும். இக்கம்பிகளில் சம நிறைகள்,தொங்கவிடப்படும் போது ஏற்படும் நீட்சிகளின் விகிதம் 1:2 எனின் அவற்றின் ஓரலகு கனவளவில் சேமிக்கப்பட்டுள்ள சக்திகளின் விகிதம்,
(1) 4/9 (2) 16/9 (3) 9/4 (4) 9/16 (5) 2/3


06) இரு விருத்தி அலைகள் ஒரே திசையில் செல்வதை உரு காட்டுகின்றது.அவ்விரு அலைகளுக்குமிடையிலான அவத்தை வித்தியாசத்துக்கு சமனாகஇருப்பது rad இல்.
(1) $\pi/4$ (2) $\pi/2$ (3) $3\pi/4$ (4) $\pi$ (5) $3\pi/2$




07) $K_1, K_2$ விசை மாறிலிகளையுடைய இரு விற்சுருள்கள் இலேசானவையும் சுயாதீன நீளம் Lo ஐயும் கொண்டவை. இவற்றில் முறையே $M_1, M_2$ திணிவுகள் தொங்கவிடப்பட சமநிலையில் சுருளின் நீளங்கள் முறையே $L_1, L_2$ ஆக இருந்தன. இங்கு $K_2=K_1$ ஆகவும் $M_2=3M_2$ ஆகவும் இருப்பின் பின்வரும் தொடர்புகளில் சரியானது
(1) $L_2=3L_1$ (2) $L_1=3L_2$ (3) $L_2=2L_1-3L_0$ (4) $L_2=3L_1-2L_0$ (5) $L_1=3(L_1-L_0)$





08) காட்டப்பட்ட சுற்றிலே A ஓர் இலட்சிய மையப் பூச்சிய அம்பியர்மானியை வகைக்குறிக்கிறது. அதன் வாசிப்பாக இருக்கக் கூடியது.
(1) 3A (2) -4A (3) -5A (4) 12A (5) 8A





09) ஒரு திரவத்திலிருந்து தப்பும் மூலக்கூறுகளை விட, கூடுதலான எண்ணிக்கையான மூலக்கூறுகள் திரவத்திற்குத் திரும்புமாயின் அப்போது நடைபெறுவது.
(1) ஒடுங்கல் (2) கடத்தல் (3) பரவல் (4) ஆவியாதல் (5) கதிர்த்தல்.

10) நீள்பார்வை குறைபாடுடைய ஒருவர் 25cm இல் உள்ள பொருளைக் காண்பதற்கு அணிய வேண்டிய வில்லை,
(1) 25cm குவிய நீள குவிவு வில்லை.
(2) 25cm குவிய நீள குழிவு வில்லை.
(3) 25cm இலும் கூடிய குவிய நீள குவிவு வில்லை.
(4) 25cm இலும் குறைந்த குவிய நீள குவிவு வில்லை.
(5) 25cm இலும் கூடிய குவிய நீள குவிவு வில்லை.


11) நீர்ப்பரப்பொன்றின் மீது வலம் நோக்கி நகரும் குறுக்கு அலை ஒன்றினதுகணநிலையை உருகாட்டுகிறது. A சிறிய மிதக்கும் பொருளாகும் இவ் அலையானது இந்நிலையில் இருந்து வலம் நோக்கி அசையும் போது A இன் காட்டப்பட்ட நிலையில் இருந்தன இடப்பெயர்ச்சி d நேரம் t யுடன் மாறுபடுவதைக் காட்டும் வரைபு,




12) $C_1,C_2$ கொள்ளளவுகளையுடைய ($C_1<C_2$) இரு கொள்ளளவிகள் தொடராக இணைக்கப்படும் போது பெறப்படும் விளையுள் கொள்ளளவம் C ஆயின்,
(1) $C< C_1/2$ (2) $C_1/2 < C <C_1$ (3) $C_1< C <C_2$ (4) $C_2<C<2C_2$ (5) $2C_2 <C$

13)





படத்தில் காட்டியுள்ள A,B,C என்னும் பரிவுக்குழாய்கள் தத்தமது அடிப்படை வகையில் பரிவுறுவதை படம் காட்டுகிறது. இவற்றின் அடிப்படை வகை பரிவு அதிர்வெண்கள் முறையே $f_a, f_b, f_C$ எனின் இவற்றுக்கிடையிலான தொடர்புகளில் சரியானது.
(1) $f_a< f_b <f_c$ (2) $f_b< f_a <f_c$ (3) $f_b< f_c <f_a$ (4) $f_a= f_c <f_b$ (5) $f_b< f_a = f_c$


14) அலைகள் சம்பந்தமாக செய்யப்பட்ட பின்வரும் கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை?
A)ஒளியால் அடர்ந்த ஊடகத்திலிருந்து ஐதானஊடகத்திற்குஒளி செல்லும் போது அதன் அலை நீளம் கூடும்.
B)வளியிலும் பார்க்க நீர் ஒலியால் ஐதானது ஆனால் ஒளியால் அடர்ந்தது.
C)ஓர் ஊடகத்திலிருந்து இன்னோர் ஊடகத்திற்கு ஒளி செல்லும் போதுமுதலாம் ஊடகத்திலும் பார்க்க இரண்டாம் ஊடகத்தில் ஒளிச் சக்திகுறைவு
(1) A,B மட்டும் (2)A மட்டும் (3)B மட்டும் (4)A,B,Cஎல்லாம்சரி (5) A,B,C எல்லாம் பிழை

15) கனவளவு V யை உடைய ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் கனவளவு விரிகைத்திறன் $\gamma_l$ ஐ உடைய ஒரு திரவம் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. கண்ணாடியின் கனவளவு விரிகைத்திறன் $\gamma_g$ ஆகும். கண்ணாடிப் பாத்திரத்தின வெப்பநிலை θ எனும் அளவினால் அதிகரிக்கப்படும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும திரவத் திணிவை ஆரம்பதிரவத் திணிவின் பின்னமாகத்தருவது.
(1) $(\gamma_l-\gamma_g)\theta$ (2) $(\gamma_l+\gamma_g)\theta$ (3) $\frac{(\gamma_l-\gamma_g)\theta}{\gamma_l+\gamma_g}$ (4) $\frac{(\gamma_l-\gamma_g)\theta}{1+\gamma_l\theta}$ (5) $\frac{\gamma_l-\gamma_g}{\gamma_g}$


16) காட்டப்பட்ட மின்சுற்றில் கொள்ளளவியில் சேமிக்கப்பட்டுள்ள ஏற்றம் யாது?
(1) பூச்சியம் (2) 1μC (3) 2 μC (4) 3 μC (5) 4 μC




17) ஒலியுறுஞ்சல் நிகழாத இடத்தில் மாறா வீதத்தில் ஒலியை பிறப்பித்துக் கொண்டிருக்கும் முதலிலிருந்து தூரம ($x$) உடன் ஒலிச்செறிவு (I) இன் மாறலை வரைபு காட்டுகிறது. வரைபைக் கொண்டு செய்யப்பட்ட பின்வரும் கூற்றுக்களுள் சரியானது/ சரியானவை.
(A) $I_1/I_2 = 2$
(B) X,Y புள்ளிகளிற்கிடையில் உள்ள ஒலிச்செறிவு மட்ட வித்தியாசம் முதல் பிறப்பிக்கும் வலுவில் தங்காது.
(C)ஒலி முதல் பிறப்பிக்கும் வலு $4\pi r^2 I_1$
(1) (A) மாத்திரம் உண்மையானது (2)(A),(B) மாத்திரம் உண்மையானவை (3) (B), (C)மாத்திரம்உண்மையானவை(4) (A),(C) மாத்திரம் உண்மையானவை (5) (A), (B), (C) ஆகிய எல்லாம் உண்மையானவை.




18) காட்டப்பட்ட தடை வலை வேலையில் A,+12V ஆகவும் B புவிக்கு இணைக்கப்பட்டும் உள்ளது. வோல்ற்மானி மையப்பூச்சிய இலட்சியமானதாயின் மாறும் தடை R ஆனது 12Ω இலிருந்து 3Ω இற்குக் குறைக்கப்படும் போது V மானி வாசிப்பின் பருமன்
(1) கூடும் (2) குறையும் (3) கூடிக் குறையும் (4) குறைந்து கூடும் (5) மாறாது




19) சமபருமனில் எதிரெதிராக ஏற்றப்பட்டுள்ள இரு சிறிய கடத்தும் கோளங்கள் குறித்த இடைத்தூரத்தில் உள்ள போது அவற்றிற்கிடையில் உள்ள நிலைமின் கவர்ச்சி விசை F ஆகும். ஏதாவது ஒன்றில் இருந்து மற்றையதற்கு அரைப்பங்கு ஏற்றம் இடமாற்றப்படின் அவற்றிற்கிடையில் தற்போதுள்ள விசை,
(1) $\frac{F_0}{4}$ (2) $\frac{F_0}{2}$ (3) $\frac{3F_0}{4}$ (4) $\frac{3F_0}{2}$ (5) $3F_0$

20) மூடிய பாத்திரத்தினுள் m திணிவு $O_2$ வாயு உள்ளது அவ்வாயுவினால் ஏற்படுத்தப்படும் அமுக்கம் P ஆகும். இப்பாத்திரத்தினுள் மேலதிகமாக m திணிவு $H_2$ வாயு வெப்பநிலை மாறாது இருக்கும் வகையில் சேர்க்கப்படின் புதிய அமுக்கம்.
(1) P (2) 2P (3) 5P (4) 16P (5) 17P

(இதன் தொடர்ச்சி 09.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில்)